வாரப்பதிப்பு விலே சதம் 20

கொழும்புத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்



மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 1991 பங்குனி திங்கள் 7-ம் நாள் (20–3 1960) ஞாயிற்றுக்கிழமை றம்ழான் 21 | இதழ் 37

# காவத்தை கொலை வழக்கில் ஜீ. ஜீ. கூலியாக கேட்டு வாங்கிய பீஸ் ரூபா 7000

## கலக வழக்குகளில் இனமாகப் பேசியதாகக் கூறுவது சுத்தப் பொய்

### பாதிக்கப்பட்டவரின் இரத்தத்தை பிழிந்துவிட்டே ஆஜரானர்

(சுதந்திரன் யாழ் நிருபர்)

கலக வழக்குகளில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குத் தாம் பிரதி உபகாரம் கருதாமல் இனமாகப் பேசியதாகத் தனிப்பெருந் தலைவர் திருவாளர் ஜீ ஜீ. பொன்னம்பலம் தம்பட்டமடித்து வருகிறார்.

இது சுத்தப் பொய் என்பது இப்போது அத்தாட்சிப்படுத்தப்படுகிறது. காவத்தை கொலை வழக்கில் ஜீ ஜீ. சவத்தான் வைத்தபடி கூலியாகக் கேட்டுப் பெற்ற பீஸ் ரூபாய் 7000

எண்ணிக் கொடுத்தவரே கூட்டங்களில் பகிரங்கமாக உண்மையைக் கூறுகிறார்: துண்டுப்பிரசுரம் வெளியிட்டு ஜீ. ஜீ யின் வேஷத்தை அம்பலப்படுத்துகிறார். தமது இரத்தத்தைப் பிழிந்து பீஸ் பெற்ற பின்பே தனிப் பெருந் தலைவர் தமது சார்பில் ஆஜரானர் என்பதை அத்தாட்சிப்படுத்துகிறார்.

"வகுப்புக் கலவரத்தின் போது தென்னிலங்கையில் கிரிமினல் வழக்குகளில் சிக்குண்ட தமிழர்களுக்காக வாதாட சமஷ்டிக் கட்சியைச் சேர்ந்த எந்த வழக்கறிஞரும் முன்வரவில்லை. சமஷ்டிக் கட்சியில் பல வழக்கறிஞர்கள் இருந்தும் ஆபத்துக்கு உதவத் தவறிவிட்டனர். காடையர்களின் எச்சரிக்கைகளைக் கூடப் பொருட்படுத்தாமல் நானே அவர்கள் விடுதலைக்காக வாதாடினேன். இது விஷயத்தில் பிரதி உபகாரம் கருதாது சேவை செய்தேன்"



திரு. ச. வஸ்தியாம்பிள்ளை

மேற்கண்டவாறு திருவாளர் பொன்னம்பலம் பருத்தித்துறையில் ஒரு கூட்டத்தில் பேசியதாக தினசரிப் பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டது. பருத்தித்துறை தவிர, யாழ்ப்பாணம் குருநகரிலும் மற்றும் இடங்களிலும்கூடத் தனிப் பெருந் தலைவர் தம்பட்டமடித்திருக்கிறார்.

#### பாதிக்கப்பட்டவர்கள் மறுப்பு

இதை மறுத்து அதாவது சட்டாகப் பணம் வாங்கிக் கொண்டுதான் ஜீ. ஜீ. கலக வழக்குகளில் ஆஜரானர் என்றும் தாமே ரூபா 7000 எண்ணிக் கொடுத்துத் தமது வழக்குக்கு அவரை அமர்த்திக்கொண்டதாகவும் காவத்தையில் பாதிக்கப்பட்ட தமிழர்களில் ஒருவரான திரு ச. வஸ்தியாம்பிள்ளை கொழும்புத்துறையில் மேடையேறிப் பகிரங்கமாகக் கூறினர்.

அதுமட்டுமல்ல, திரு வஸ்தியாம்பிள்ளையும் காவத்தைக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட மற்றுமொரு தமிழரான திரு ச. ம. செல்லத்துரையும் தாம் இரத்தத்தைப் பிழிந்து ஜீ. ஜீக்கு ரூபா 7000 கூலியாகக் கொடுத்த உண்மையைத் துண்டுப்பிரசுரம் மூலமும் பொதுமக்களுக்கு எடுத்துரைத்திருக்கிறார்கள்.

அவர்கள் தமது துண்டுப் பிரசுரத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள்:-

#### உண்மை இதுதான்!

குருநகர் மைதானத்தில் 5-3-60 சனிக்கிழமை மாலை நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் திரு ஜீ ஜீ. பொன்னம்பலம் அவர்கள் திரு ச ம. செல்லத்துரை, திரு ச. வஸ்தியாம்பிள்ளை ஆகிய எங்களோடு சம்பந்தப்பட்ட காவத்தைக் கொலைக் குற்றச்சாட்டு வழக்கில் தாம் ஏற்பட்டு இலவசமாக வாதாடியதாகத் தெரிவித்தாரெனப் பல யாழ்ப்பாணத் தொகுதி மக்கள் எங்களிடம் தெரிவித்தார்கள். ஆகையால் நாங்கள் இருவரும் பொதுமக்களுக்கு பின்வரும் உண்மையைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

எங்களோடு சம்பந்தப்பட்ட தமிழ் சிறீ எதிர்ப்பினுல் உண்டாகிய காவத்தை கொலைக் குற்றச்சாட்டு வழக்கில் ஏற்பட்டு வாதாடியதற்காக திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களுக்கு, அவர் கேட்டுக் கொண்ட 7000 ரூபாவையும் சலாராகக் கொடுத்தோமென்பதை உறுதிப்படுத்துகிறோம்.

இங்ஙனம்


ச. வஸ்தியாம்பிள்ளை
நிர். 9, கண்டி ரோட்,
யாழ்ப்பாணம்

ச. ம. செல்லத்துரை
கரம்பன்–மேற்கு,
ஊர்காவற்றுறை

#### ராமநாதன் மிரட்டல்

இந்தத் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டதும் உண்மை வெளிச்சமாகவே ஜீ. ஜீ. யின் புதல்வர் ராமநாதன் திரு. வஸ்தியாம்பிள்ளையின் வீட்டுக்கு ஓடோடிச் சென்று "துண்டுப்பிரசுரத்தை வெளி

(9-ம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணத்துப் பொதுமக்களால் அன்போடும் ஆதரவோடும் "பி. எஸ்" என்று அழைக்கப்படும் முதுபெரும் குரவர் டாக்டர் எஸ். சுப்பிரமணியம் தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளையை ஆதரித்துப் பணியாற்றி வருகின்றார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் ஜின்னுஹ் மைதானத்துக்கு அருகாமையில் தமிழரசுக்கட்சியின் தேர்தல் காரியாலயம் ஒன்றைக் குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தார் டாக்டர் சுப்பிரமணியம்.

பிரஸ்தாப விழாவிற்கு ஜனப் உமர் அப்துல் காதர் தலைமை தாங்கினர். திருவாளர்கள் எஸ். ஜே வி. செல்வநாயகம், ஏ. அமிர்தலிங்கம், ஜனப். வ. முதத்துராசா, அபேட்சகர் திரு. எஸ் கதிரவேற்பிள்ளை ஆகியோர் சொற்பெருக்காற்றினர்.

டாக்டர் சுப்பிரமணியம் திறப்பு வைபவப் பிரசங்கத்தை நிகழ்த்திக் கொண்டிருப்பதைப் படத்தில் காண்க.

தொய்வு (ASTHMA) சங்காரி

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(RICHELET'S PECTORAL)

★ இடைவிடாத இருமல்
★ இளைப்பு
★ மூச்சுத் திணறல்
★ கிர் புர் சத்தம்
★ நெஞ்சுவலி
★ தொண்டை வலி






இளைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈளை நோயினுல் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷோல் வீதி, கொழும்பு.

(போன்: 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிங்களத் தலைவர்களை நம்பிக் கெடாதீர்கள்'

## என். எம். பெரேரா முன்னர்

## தமிழர்களுக்கு இப்படி உபதேசித்தார்

## இப்போது தம்மை நம்பச் சொல்கிறார்

## பதவியில் அமர்த்தும்படி கெஞ்சுகிறார்

## இரட்டை டாக்டர் பட்டம் பெற்றதன்

## விளைவா இது? இரண்டு நாக்கால் பேசுகிறாரே!

தமிழ் பேசும் இனமாகிய நாம் எமக்கென்று ஒரு நிலையான அரசியல் வாழ்வை—அமைப்பைப் பெற வேண்டுமெனில் சிங்களத் தலைவர்களை நம்பி சீரழிந்து போகாது "அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்' என்று தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அடிக்கடி கூறும் கூற்றில் நம்பிக்கை கொண்டு செயல் ஆற்ற வேண்டும். சிங்களத் தலைவர்களை நம்பினால்தான் எமக்கு வாழ்வுண்டு என்று கூறும் தமிழர் இருவகைப்படுவர். அவர்களுள் ஒரு பகுதியினர் நல்லெண்ணம் படைத்தவர்கள். ஆனால் ஆழமாகச் சிந்திக்கும் திறனும் இலங்கை அரசியலின் போக்கை ஊன்றிக் கவனிக்கும் ஆற்றலும் அற்றவர்கள்.

மற்றைய பகுதியினர் இலங்கையின் தென்பகுதியில் நெடுங்காலமாக சுகபோக வாழ்வு வாழ்பவர்கள். அவர்களுக்கு தமிழ் பேசும் இனம் எக்கேடு கெட்டாலும் கவலையில்லை. தாம் உண்டு தம் குடும்பம் உண்டென்று வாழ்பவர்கள். அவர்கள் தங்கள் வழித்தோன்றல்களின் வாழ்வு எப்படி அமையப் போகிற தென்பதை யிட்டு சிறிதும் சிந்திக்க நேரம் அற்றவர்கள். இல்லை மன்னிக்கவும்— தம் வழித்தோன்றல்கள் சிங்களவராய் மாறுவதைக் கூட தங்கள் வசதிக்காக வரவேற்பவர்கள்.

### டொனமூர் திட்டமும் சேர். பொன். இராமநாதனும்

ஆனால் தமிழ் பேசும் இனத்தின் வாழ்வில் உண்மையான அக்கரையுள்ள எந்தத் தமிழ் மகனும் "ஏனோதானோ" என்று வாழ முடியாது நாம் வகுக்கும் ஒவ்வொரு திட்டமும் தமிழ் பேசும் இனத்தின் வருங்கால வாழ்வை வளமாக்கும் திட்டமாகவே அமைய வேண்டும். இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தின் அரசியல் வரலாற்றை ஊன்றிக் கவனிப்போமாயின் நாம் ஒவ்வாரு திருப்பத்திலும் சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப் பட்டவர்களாகவே இருக்கிறோம் என்பதை உணர்வோம். சிங்களவர் தமிழர் என்ற இனபேதத்தை மறந்து ஈழத்தின் விடுதலைக்கு போராடிய சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் ஆகியோர் கூட இறுதியில் சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டவர்களே யாவர் "Donoughmore means Tamils no more" டொனமூர் எனில் தமிழர் இனிமேல் இல்லை எனக்கூறி டொனமூர்க் குழுவின் அரசியல் சட்ட திட்டங்களை சேர். பொன். இராமநாதன் தமது இறுதிக் காலத்தில் எதிர்த்ததின் அடிப்படைக் காரணம் தமிழரின் அரசியல் உரிமை பறிக்கப்பட்டு இன வெறி பிடித்த சிங்களத் தலைவர்கள் கையில் அரசியல் தலைமைப் பீடம் ஒப்படைக்கப்படும் என்பதே.

### அருணாசலமும் தமிழ் அவையும்

இலங்கை தேசிய காங்கிரசை (Ceylon National Congress) தோற்றுவித்து அதன் தலைவராய் விளங்கிய சேர். பொன். அருணாசலம் தமது இறுதிக்காலத்தில் தமிழ் அவையினை (Tamil League) தோற்றுவித்தது ஓரளவு ஆறுதல் சிங்களத் தலைவர்களின் இனவெறிக்கு அணை கட்டத்தான் என்று சொன்னால் அது தவறாகாது.

### டாக்டர் என். எம். கூறிய பேருண்மை

மேற் கூறியவாறு தமிழ் பேசும் இனம் அடக்கி ஒடுக்கப் படுவதை மனதில் வைத்துப்போலும் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா பின்வருமாறு ஓர் பேருண்மையை எடுத்துக் கூறினார் 1956-ல்.

"In point of fact if you go back to the history of this country you will find that the minorities have been betrayed at every possible turn. From the time of Mr. D. S. Senanayake, when the Donoughmore Constitution came up, the minorities particularly the

ஈழவேந்தன்

Indian Community were given certain promises which were broken. Then again, when the Soulbury Constitution too, come up, similar concessions whi h were promised were broken right along. In the Indian Immigrants and Emigrants bill various promises were made over and over agein with regard to the treatment to be given to the Indians and everyone of these promises were broken in the implementation of that bill. In the light of that, are we surprised that the minorities are gibbling at the acceptance of these assurances? (Hansard Ref. Langusge Debate 1956)

இதன் பொருள் இது தான்:

இலங்கையின் ஒவ்வொரு திருப்பத்திலும் சிறுபான்மையோர் பெரும்பான்மைத் தலைவர்களால் துரோகம் இழைக்கப் பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். டொனமூர் அரசியல் திட்டம் வெளிவந்த திரு. டி. எஸ். சேனநாயக்காவின் காலம் தொட்டு சிறுபான்மையோருக்கு குறிப்பாக இந்திய மக்களுக்கு சில வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு காலப் போக்கில் அவை காற்றோடு கலந்து பறக்க விடப்பட்டன.

மீண்டும் சோல்பரி அரசியல் சட்டம் உருவாகிய காலத்திலும் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் இறுதியில் முறியடிக்கப்பட்டன.

இந்திய குடியேற்ற வெளியேற்ற சட்டத்திலும்மீண்டும் மீண்டும் எத்தனையோ உறுதிமொழிகள் அளிக்கப்பட்டு நடைமுறையில் அவைகள் அனைத்தும் அவர்களுக்கு பாதகமாகவே அமல் செய்யப்பட்டன. இந் நிலையில் சிறுபான்மை மக்கள் எங்கள் உறுதிமொழிகளையிட்டு எள்ளி நகையாடுவது வியப்புக்குரியதா? (பாராளுமன்ற நடவடிக்கைப் புத்தகம் ஹன்சாட் தனிச்சிங்களச் சட்ட விவாதம் 1956.)

ஏனைய சிங்களத் தலைவர்கள் இப்படி தொடர்ச்சியாக [illegible] கள் அரசியல் வாழ்க்கையே ஒரு ஏமாற்றுப் படலமாக ஆக்கி விட்டார்கள் என்று 1956ல் உள்ளம் நொந்து கூறினார் டாக்டர் என். எம். பெரேரா. இன்று அதே என். எம். பெரேரா என்ன கூறுகிறார்?

1939ல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடாத்தப்படும் குடியேற்ற திட்டங்களை எதிர்த்த டாக்டர் என். எம். அவை இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மருந்தளவும் துணை புரியாது என்று இடித்துரைத்தார். ஆனால் இன்று இக்குடியேற்ற திட்டங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களை சிங்கள மயமாய் ஆக்குவதற்கு பெருந்துணையாய் அமைந்திருப்பதை அறிந்தும் மௌனம் சாதிக்கிறார்.

### மொழியில் குத்துக்கரணம்

19-10-55-ல் (ஹன்சாட் Hansard Vol 23. No. 6) தமிழுக்கும் சிங்களத்திற்கும் ஒத்த உரிமை (சம அந்தஸ்து (Parity of status) வழங்க வேண்டுமென்று முன் மொழிந்த (பிரேரித்த) டாக்டர் என். எம். இன்று காலம் சென்ற திரு. பண்டாரநாயக்காவின் தமிழின் நியாயமான அளவு உபயோகம் (Reasonable use of Tamil) என்ற கொள்கையும் தமது சம அந்தஸ்து (Parity ofstatus) கொள்கையும் ஒன்றுதான் என்று கூறுகிறார்!

### தமிழ்த் தொழிலாளர்களுக்கு துரோகம்

தொடர்ச்சியாககுடியேற்ற விடயத்திலும் மொழி விடயத்திலும் குத்துக் கரணம் அடித்ததோடு டாக்டர் என். எம். திருப்தியடைந்திருப்பின் அவரின் செயலை போகட்டும் என்று சொல்லி ஓரளவாகுதல் மன்னித்திருக்கலாம். ஆனால் சர்வதேசிய தொழிலாள இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்று தம்பட்டமடித்துக் கொள்ளும் சமசமாஜக் கட்சியின் ஆயுட் காலத் தலைவராய் விளங்கும் டாக்டர் என். எம். தாம் ஆட்சிக்கு வரின் தமிழ் பேசும் இனத்திற்கு முதன் முதலாகச் செய்யப் போகும் கைங்கரியம் நான்கு லட்சம் மலை நாட்டுத் தமிழர்களை இந்தியாவிற்கு கப்பலேற்றுவதே என்று பல இடங்களில் கூறியுள்ளார். இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதால் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளிகளின் பிரச்னை தீராது அது முழுக்க முழுக்க உள்நாட்டு பிரச்னை என்று மற்றைய சிங்கள அரசியல் வாதிகளுக்கு அறிவுறுத்திய அதே டாக்டர் என். எம். பெரேரா இன்று இக் குத்துக்கரணம்

(14-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில்

## ஆள் மாருட்டத்துக்கு பெருமளவில் திட்டம்?

### ஆட்டங் கண்ட அபேட்சகரின் கடைசிநேர முயற்சிகள்

### சிங்களக் கட்சி கொடுத்துதவும் பணமும் சாராயமும்: பொதுமக்கள் உஷார்!

(சுதந்திரன் நிருபர்)

யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடும் அபேட்சகர் ஒருவர் தாம் இம் முறை தோல்வியடையப் போவதை உணர்ந்து, பல சட்ட விரோதமான காரியங்களைச் செய்தேனும் வெற்றியீட்ட அந்தரங்கத் திட்டங்களைத் தீட்டி வருவதாகத் தெரிகிறது.

அவர் தீட்டியுள்ள சட்ட விரோதத் திட்டங்களில் ஒன்று பெருமளவில் ஆள் மாருட்டம் செய்து கள்ள வாக்குகளைப் போட்டு விடுவது என்பதாகும். இதற்காக கொழும்பிலும் மற்ற இடங்களிலுமிருந்து கள்ளவாக்காளரைத் தருவிக்க ஏஜண்டுகள் அமர்த்தி வேலை செய்து வருகிறார் எனத் தெரிகிறது.

### விழிப்புடன் இருக்க வேண்டும்

இந்த அநீதியைத் தடுத்து நிறுத்தும் விஷயத்தில் அவரோடு போட்டியிடும் இதர அபேட்சகர்களின் வாக்களிப்பு நிலையப் பிரதிநிதிகளும், பொது மக்களும் விழிப்புடன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கள்ள வாக்குகள் போடப் படுவது, காலை நேரத்திலும் கடைசி நேரத்திலும்தான் அதிகமாக நடைபெறுவதுண்டு. உண்மையான வாக்காளர்கள் நேரகாலத்தோடு சென்று தத்தம் வாக்குகளைப் பதிவு செய்துவிட வேண்டும். பிந்திப் பிந்தியிருந்தால் யாராவது ஆள் மாருட்டப் பேர்வழிகள் பொய்ப் பேரில் சென்று வாக்குகளைப் பயன்படுத்திக் கொள்வார்கள். அப்புறம் உண்மை வாக்காளர் வாக்குப் போடப் போனால் "உங்கள் வாக்கு ஏற்கனவே விழுந்து விட்டதே" என்ற பதில்தான் கிடைக்கும். எனவே இந்த நிலைக்கு இடம் கொடுக்காமல் உண்மை வாக்காளர் நடந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### பொருள் கொடுத்து வாக்கு வேட்டையா?

பிரஸ்தாப அபேட்சகர் சில பகுதிகளுக்கு நைலோன் வலைகளும், பெண்களுக்கு சேலைகளும், பிள்ளைகளுக்கு சிலேட், நோட்டுப் புத்தகம், குடை முதலியனவும் வழங்கி வாக்கு வேட்டையாடுவதாகவும் தெரிகிறது.

அதே அபேட்சகர் தேர்தல் தினத்தன்று தமது ஆதரவாளர்களான வாக்காளரை ஏற்றிவர ஏகப்பட்ட மோட்டார் கார்களைப் பணம் கொடுத்து "புக்"

(15-ம் பக்கம் பார்க்க)

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எம். பரமசிவர், யாழ்ப்பாணம்

கே: குயுக்தியாரே, தாங்கள் வருவது உரைப்பவராயிற்றே அடுத்த பாராளுமன்றத்தில் யார் பிரதம மந்திரியாய் வருவார் சொல்ல முடியுமா?

ப: என். எம். பெரேரா இல்லை. பிலிப் குணவர்த்தனுவுமில்லை. சி. பி. டி. சில்வா இல்லை. டாக்டர் விக்கிரமசிங்காவோ பீட்டர் கெனமனே இல்லை. இரியகொல்லையும இல்லை. எல் பி. பி. பெரும்பான்மை பெறுவிடினும் தஹநாயகா பிரதமராக வந்தாலும் ஆச்சரியம் இல்லை 'அற்புதங்கள் நிகழும் காலம் இன்னும் அஸ்தமித்துவிடவில்லை' என்கிறுர் தஹநாயகா. இந்தப் பேச்சில் ஏதாவது மர்மம் இருக்கலாம்!

ஃ

பெ. குமாரதாசன், சாவகச்சேரி

கே: கடந்த மூன்றரை ஆண்டுக்காலத்தில் முன்னுள் அடுப்படி முன்னணித் தலைவரும் இன்னுள் ஆனைப்பந்திக் காங்கிரஸ் வாலுமான திரு வி. குமாரசாமி சாதித்த சாதனைகள் யாவை?

ப: கல்வித்துறையில் அவர் பல பாடசாலைகளை மூடிவித்திருக்கிறுர். திரு வி. என். நவரத்தினம் ஆரம்பித்த பல தமிழ் பாடசாலைகளை, பிரதமர் தஹநாவைக் கண்டு "தமிழ்ப் பாடசாலைகள் இப்போது சாவகச்சேரியில் ஏன்? நான் பிரதிநிதியாக வந்த பின் சிங்களப் பாடசாலைகளாகவே ஆரம்பிக்கலாமே" என்று உறுதி கூறி இப்போது மூடு விழா நடத்தியிருக்கிறுர். கலைத்துறையில், தமிழ் மக்கள் 1958 வகுப்புக் கலவரங்களில் கஷ்டப்பட்டபோது இவர் சிங்கள நடனக் காரிகளோடு மேல்நாடுகளில் உல்லாச சுற்றுப்பிரயாணங்கள் நடத்தி சிங்கள கலை, கலாச்சாரங்களை வெள்ளைக்கார மக்களுக்கு விளக்கியிருக்கிறுர். பாராளுமன்றத்தில் இல்லாத காலத்தில் சிங்கள டைப்பிஸ்ட் ஒருவரை வீட்டில் வைத்து சிங்களம் படித்திருக்கிறுர். இவ்வளவு போதாவா சாதனைகள் என்று குறிப்பிட?

ஃ

எல். கனகமணி, கண்டி

கே: உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் கைப்பற்ற வேண்டும் என்ற கிளர்ச்சியில் தமிழரசுக் கட்சியின் கொள்கை என்ன?

ப: மத ஸ்தாபனப் பாடசாலைகளை ஒருபோதும் அரசாங்கம் கைப்பற்றக்கூடாது என்பதுதான் தமிழரசுக் கட்சியின் அசைக்க முடியாத கொள்கையாகும்.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்

கே: காலிமுகக் கடற்கரையில் சத்தியாக்கிரகம் இருந்த தமிழரசுவாதிகளைத் தாம் தான் காப்பாற்றியதாகவும், தாம் அன்று அங்கு இல்லாவிட்டால் எல்லோரும் தொலைந்திருப்பார்கள் என்றும் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஒரு கூட்டத்தில் கூறினுரே, உண்மையா?

ப: தம்மைக் காப்பாற்ற ரஞ்சனி காப்ஸ்லிலிருந்து சில குண்டர்களைக் கூடவே அழைத்துக் கொண்டுவந்த இந்தப் பயந்தாங்கொள்ளிக் கோழை தமது வீரத்தைப் பற்றி வேறு தம்பட்டமடிக்கிறுரா? தான் போக வழியறியாத மூஞ்சூறு விளக்குமாற்றையும் கட்டிக் கொண்டு போயிற்றும்!

ஃ

சி. சித்திரவேல், முறக்கட்டான்சேனை

கே: கற்குடாத் தொகுதியில் போட்டியிடும் ஒரு 'பெரிய' மனிதர், யாழ்ப்பாணத்தாரகளை மட்டக்களப்பிலிருந்து துரத்த வேண்டும் என்று கூறுகிறுரே?




ப: பாவம்! பள்ளியறையில் அவர் அடைந்த ஏமாற்றம் பரந்த அனுபவமாக வெளி வருகிறது வெளியிலிருக்கும் யாழ்ப்பாணத்தார் மீது அவர் பாணந் தொடுக்கு முன்பு வீட்டுக்குள்ளிருக்கும் தர்மபத்தினியை அவர் வெளியேற்றத் துணிவாரா? தாம் செய்யத் துணியாததைப் பிறருக்குப் போதிக்கும் இத்தகைய பேடிகளுக்குப் பின்னுலும் திரிய நாலு பேர் கிடைக்கிறுர்களே நமது நாட்டில்!

ஃ

செல்வி சாந்தநாயகி பரமசாமி, யாழ்ப்பாணம்

கே: "சமஷ்டி ஆட்சியை நான் சாகும்வரை எதிர்ப்பேன்" என்று கூறுகிறுரே தனிப்பெருந் தலைவர் பொன்னம்பலம்.

ப: விட்டுத்தள்ளம்மா அவர் பேச்சை. நாணயஸ்தர் பேச்சுக்கல்லவோ நாம் மதிப்புக் கொடுக்க வேண்டும். "யு. என். பி. கட்சியை நான் சாகும்வரை எதிர்ப்பேன்" என்று தான் 1947ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின்போது கூறினுர். அப்படி எதிர்த்தாரா? எதிர்க்கவில்லையென்றுல் இப்போது செத்துவிட்டாரா? 1952ம் ஆண்டுத் தேர்தலில் வெற்றிபெற்றதும் யாழ்ப்பாணம் கச்சேரி மாடியில் நின்று பேசுகையில் "இந்த நாட்டுக்கு ஒரு சமஷ்டி ஆட்சி வேண்டுமானுல் அதையும் இந்தப் பொன்னம்பலத்தினுல் தான் பெற்றுக்கொடுக்க முடியும்" என்று அகம்பாவத்தோடு மார்தட்டினுர். அவரே பெற்றுக்கொடுக்கக் கூடியதை அவரே எதிர்ப்பது ஒரு வேடிக்கைதானே!

ஃ

கே. சொர்ணலிங்கம், மட்டக்களப்பு

கே: ஐயா, பசிக்கிறது. உண்ண ஏதாவது கொடுக்க மாட்டீர்களா?

ப: ஐயோ, பாவம். பெயர் சொர்ணலிங்கம்! கையில் துட்டு இல்லைபோல் இருக்கிறது. பரவாயில்லை. அப்படியே நேரே சென்ரல் ரோட்டுக்கு நடையைக் கட்டும். அங்கு நின்று மட்டக்களப்பில் போட்டியிடும் ஒரு சுயேச்சை அபேட்சகரைப் பற்றி நாலு வார்த்தை பாராட்டிப் பேசும். யாராவது தர்மவான்கள் உம்மை அழைத்து ஒரு வடை, ஒரு டீ இனுமாகத் தருவார்கள். இப்படியும் அபேட்சகரின் புகழைப் பரப்புகிறுர்களே!

ஃ

கே. என். தம்பி, சந்திவெளி

கே: மட்டக்களப்பிலுள்ள கத்தோலிக்க கிறிஸ்தவ மக்கள் அத்துவக்காத்து மயில் வாகனத்துக்கு வாக்குப் போடுவார்களா?

ப: சமசமாஜிஸ்ட்டான மயில்வாகனததுக்கு எப்படிப் போடுவார்கள்? போதாக்குறைக்கு கொம்யூனிஸ்டான ஒரு பீயேயும் கூட்டுச் சேர்ந்திருக்கிறுரே! அந்த பீயே அன்றொருநாள் ஒரு மாதா கோயிலைச் சுட்டிக்காட்டி "அதோ தெரிகிறது திருடர்கள் குகை" என்று கூறினுராம். இப்படியான ஒரு பண்பு கெட்டவரை ஒரு ஆசிரிய[illegible] கொண்டிருக்கும் ஒரு [illegible]ளரிகூட மட்டக்களப்பில் உயிர்வாழ்வது மட்டக்களப்பு மக்களின் பொறுமையினுல்தான் என்று சொல்ல வேண்டும்.

ஃ

நா வடிவேலு, சாவகச்சேரி

கே: இலங்கையில் புகழ் பெற்ற குத்துக்கரண வீரர் சிலரை உம்மால் கூற முடியுமா?

ப: வரிசைக் கிரமப்படி கூறுகிறேன் 1. ஜீ ஜீ பொன்னம்பலம் 2. சேர் ராஸிக் பரீத் 3, கேட் முதலியார் எம்.

> திருவாளர் குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்.
> த. பெட்டி 1183,
> கொழும்பு-12.

எஸ். சாரியப்பர் 4. வி. குமாரசாமி 5. எஸ். யு. எதிர்மன்னசிங்கம் 6. எம். எம். முஸ்தபா 7. ஆர். ஈ. ஜயதிலகா 8. டபிள்யு. தஹநாயகா.

ஃ

எஸ். நாகராசன், கிரான்

கே: குயுக்தியாரே, கிழக்கு மாகாணத்தில் போட்டியிடும் ஒரு அபேட்சகரை முன்பு நீங்கள் ஒரு பத்திரிகையில் 'தூங்காத பிரதிநிதி' யென்று பாராட்டி எழுதியிருந்தீர்களாம். இப்போது அவரைச் சுதந்திரனில் தூற்றி எழுதிக் கூலிக்கு மாரடிக்கின்றீர்களாம். கொள்கையில் குத்துக்கரணம் அடித்துவிட்டீர்களாம். இப்படி ஒரு பத்திரிகையையும் கூட்டத்தில் காட்டி ஒரு கொம்யுனிஸ்டு பீயே பேசினுர். இது உண்மையா?

ப: உண்மைதான். சம்பந்தப்பட்ட அந்த மனிதரை நான் "தூங்காத பிரதிநிதி" யென்று பாராட்டியெழுதிய காலத்தில் அவர் உண்மையிலேயே கிழக்கு மாகாணத்தின் தூங்காத பிரதிநிதியாக அரசாங்க சபையில் விழிப்போடு அங்கம் வகித்தார். கிழக்கு மாகாண ஏழை மக்களின் இதய சூரியனுக, என் போன்ற வாலிபர்களின் இலட்சிய புருஷனுக விளங்கினுர். ஆனுல் இப்போது கொழும்பு பேவ்மெண்டில் கூட விழுந்து அறிவு சுரணையற்றுத் தூங்கிவிடுகிறுரே! தூங்காத பிரதிநிதியைப் பாராட்டினேன். தூங்கும் பிரதிநிதியையும் பாராட்ட முடியுமா? தூங்கும் நிலையில் உள்ள பீயேக்கள் தான் பாராட்டிப் புட்டிப் பரிசு பெற வேண்டும்.

ஃ

சு. செல்வராசா, மட்டக்களப்பு

கே: மட்டக்களப்புத் தொகுதியில் போட்டியிடும் அபேட்சகர்கள் சிலரால் பணம் பச்சைத் தண்ணீராகச் செலவிடப்படுகிறதே!

ப: மட்டக்களப்பின் பாண் வியாபாரத்தை, மீன் வியாபாரத்தை, மரக்கறி வியாபாரத்தை, ஹோட்டல் வியாபாரத்தை, கொந்தருத்து வியாபாரத்தை எல்லாம் தங்கள் கையில் வைத்திருக்க வேண்டும் என்று ஆசைப்படும் சிங்கள முதலாளிகள் தமது ஏஜண்டாக ஒருவரை நியமித்து அவரைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பத் திரட்டிக் கொடுத்த பணம் அவ்வளவும் செலவழியத் தானே வேண்டும். தண்ணீர் பட்டபாடாகச் செலவழியட்டும். வாங்குபவர் வாங்கட்டும். குடிப்பவர் குடிக்கட்டும். எடுப்பவர் எடுக்கட்டும். ஆனுல் 19ந் தேதி காலையில் வாக்குப் போடும்போது மட்டும் தவருமல் வீட்டுக்கு நேரே போட்டுவிடட்டும். புத்திசாலிகளான மட்டக்களப்புத் தொகுதி மக்கள் அவ்வளவும் செய்வார்கள் என்று தமிழ் தாய் நம்பியிருக்கிறுள். அவள் நம்பிக்கை அவம்போகாது.

ஃ

ஆர். தேவி, கொழும்பு

கே: தேர்தல் 19ந் தேதி வருவதால்தான் தமிழரசுக் கட்சி 19 அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறதோ?

ப: ஆம், 19ந் தேதி 19 பிரதிநிதிகளையும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே தேர்ந்தெடுக்க வேண்டியது தமிழ் மக்களின் கடமைதான். அதுமட்டுமல்ல இன்னொரு தேதி பொருந்துகிறதே. புதிய பாராளுமன்றம் மார்ச் 31ந் தேதி கூடுகிறது. மார்ச் 31தான் தமிழரசுத் தந்தை திரு செல்வநாயகத்தின் பிறந்த தினமும் ஆகும். அன்று அவருக்கு 63 வயது ஆரம்பிக்கும்.

ஃ

தேவன், அராலி தெற்கு.

கே: தமிழ்ப் பகுதிகளில் எதிர்க் கட்சி அபேட்சகர்களாகப் போட்டியிடும் பலர் தாமும் தமிழரசுக் கட்சிதான் என்று வாக்காளரிடம் சொல்லி வாக்குக் கேட்கிறுர்களாமே, இது ஏன்?

ப: இது ஏன் என்று வேறு கேட்க வேண்டுமா? இதிலிருந்தே தமிழரசுக் கட்சியின் செல்வாக்குத் தெரியவில்லையா? தமிழ்ப் பகுதிகளில் வாக்குப் பெற வேண்டுமானுல் "நானும் தமிழரசுக் கட்சிதான்" என்று சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. நானும் சமசமாஜிதான், நானும் கொம்யுனிஸ்டுதான் நானும் தமிழ் காங்கிரஸ்தான் என்று கூறிக்கொண்டு வரும் போலி அபேட்சகர்களைக் காண முடியவில்லையே!

ஃ

எம். முகம்மது, மட்டக்களப்பு

கே: தாங்கள் இரண்டு வாரங்களுக்கு முன்பு வட மாகாணத்தைச் சுற்றிப் பார்த்ததாக எழுதியிருந்தீர்கள். ஏன் தாங்கள் கிழக்கு மாகாணத்துக்கு வருவதில்லை?

ப: ஏன் வருவதில்லை? நியமனப் பத்திரம் தாக்கல் செய்த வாரத்திலும் பெப்ரவரி மாதம் முதல் வாரத்திலும் மட்டக்களப்பு முழுவதிலும் சுற்றி தேர்தல் நோட்டம் பார்த்தேனே.

ஃ

க. சந்திரசேகரம், பதுளை

கே: குயுக்தியாரே, இவ்வளவு அற்புதமாக எழுதத் தாங்கள் என்ன பேனை பாவிக்கிறீர்கள்?

ப: நான் இப்போது பாவிப்பது ஒரு பாக்கர் வாக்குமாட்டிக் பேனை. ஒரு நண்பர் பிரசண்டாகக் கொடுத்தது. அந்தப் பேனை இப்போது அடிக்கடி மை அடைத்துக் கொள்ளுகிறது. வேறு பேனை ஒன்று தேடத்தான் வேண்டும். யாராவது நண்பர்கள் ஒரு விலை உயர்ந்த ஷிபேர்ஸ் பேனை வாங்கிப் பரிசு தரும் வரை காத்திருக்கிறேன்.

அகில இலங்கை ஆனைப்பந்தி காங்கிரஸ்
ஆயுட்டலைவர் பொன்னம்பலப் பெருமானின்

## திடீர் திருப்புகள்

('திருப்புகள்' என்றுல் திருப்புகழ் அன்று. திருப்பங்கள் என்று பொருள்படும் என்க)

மன்னுரில் போட்டியிட்டுத்
தோற்ற முகம் ஒன்றே
மாறியிடம் பருத்துறையில்
வென்ற முகம் ஒன்றே
ஐம்பதுக்கைம் பதுகேட்ட
அசட்டு முகம் ஒன்றே
அத்தோடு தமிழ்க் காங்கிரஸ்
அமைத்த முகம் ஒன்றே —1

யுஎன்பி ஒழிக்க வந்த
யுத்த முகம் ஒன்றே
நாயைப் போல் "டி எஸ்" கால்
நயந்த முகம் ஒன்றே
மானமிழந் தேமந்த்ரி
யான முகம் ஒன்றே
மலைநாட்டுத் தமிழர் தமைத்
தொலைத்த முகம் ஒன்றே — 2

கூட்டாட்சி தனையெதிர்த்துத்
தனி நாடு! பின்னர்
கொள்கை யின்றி ஓராட்சி
போற்று முகம் ஒன்றே
நம்பிய தமிழினத்தை
நட்டாற்றில் விட்டே
நயமாயிங் கிலீஸ் பேசிக்
கவிழ்த்த முகம் ஒன்றே — 3

கரணவிளை யாட்டிலே
பெருமை யுறு வோனே
காங்கேயர் பெற்ற பொன்
அம்பலத் தானே
பத்துமுக மான பொருள்
நீயருள வேண்டும்
எத்தனை எமை என்றும்
எய்த்த பெருமானே — 4

— "களப்பூர் கவிஞர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கட்டிச் சோலேக்கு பொலீஸ் தேவையில்லே

## சிட்னி சொய்ஸாவிடம் இராசமாணிக்கம் கூறினர்

### எதிர்மன்னருக்கு எங்கும் எதிர்ப்பு "பொலீஸ் பொலீஸ்" என்று கூச்சல்!

**"திரு எஸ். யு எதிர்மன்னசிங்கம் புகார் செய்வதுபோல் கொக்கட்டிச்சோலே மக்கள் குடிகாரர்களுமல்லர்; வெறிகாரர்களுமல்லர்; குழப்பக்காரர்களுமல்லர். கொக்கட்டிச்சோலே மிகவும் அமைதியான ஒரு கிராமம். அங்கு வாழும் மக்கள் சாந்தமும் சமாதானமும் நிரம்பியவர்கள். எனவே, கொக்கட்டிச் சோலேயில் ஒரு பொலீஸ் ஸ்டேஷன் அவசியமேயில்லே"**

மேற்கண்டவாறு பட்டிருப்புத் தொகுதியில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி அபேட்சகரான திரு எஸ். எம். இராசமாணிக்கம் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு சிட்னி டி சொய்ஸாவிடம் கூறினர்.

திரு சிட்னி டி சொய்ஸா மோட்டார் விபத்துக்குள் சிக்குவதற்கு முன்னர் கிழக்கு மாகாணத்துக்கு ஒரு உயர்தரப் பொலீஸ் பரிசிலனேக்காகச் சென்றிருந்தார்.

அப்படிச் சென்றிருந்த சமயம் மட்டக்களப்புப் பிரிவு தேர்தல் சம்பந்தமான ஒழுங்குகளேயும் மேற்பார்வை செய்தார்.

பட்டிருப்புத் தொகுதி சம்பந்தமாக நடந்த ஒரு மாநாட்டில் திரு எஸ். எம். இராசமாணிக்கம், திரு எஸ். யு. எதிர்மன்னசிங்கம் உட்பட, பல அரசாங்க உத்தியோகத்தர்களும் சமுகமாயிருந்தனர்.

#### எதிர் மன்னர் புகார்

அப்போதுதான் திரு எதிர்மன்னசிங்கம் கொக்கட்டிச்சோலே என்னும் கிராமம் பற்றி பொலீஸ் மேலதிபரான திரு சிட்னி டி சொய்ஸாவிடம் புகார் செய்தார்.

தாம் கொக்கட்டிச்சோலேக்குள் தாராளமாக நடமாட முடியவில்லேயென்றும், அங்குள்ள மக்கள் சதா குடிக்கிருர்கள் என்றும், அங்கு ஒரு பொலீஸ் ஸ்டேஷன் அவசியம் நிறுவப்படவேண்டும் என்றும் திரு எதிர்மன்னசிங்கம் கூறினர்.

இதைக் கேட்டபோதுதான் திரு இராசமாணிக்கம் ஆரம்பத்தில் கூறியவாறு பதில் உத்தரம் கொடுத்தார்.

#### இராசமாணிக்கம் மறுப்பு

திரு இராசமாணிக்கம் தொடர்ந்து பேசுகையில், "திரு எதிர்மன்னசிங்கம் கூறுவதுபோல் கொக்கட்டிச்சோலே மக்கள் குடிகாரர்களாக எனக்குத் தெரியவில்லே. அவர்கள் கண்ணியமானவர்களாகவே வாழ்கின்றனர்கள். குடியைத் தடுப்பதற்காக கொக்கட்டிச்சோலேயில் ஒரு பொலீஸ் ஸ்டேஷன் நிறுவுவதானல் சிலர் பிரயாணம் செய்கிற மோட்டார் கார்களுக்குள் எல்லாம் பொலீஸ் ஸ்டேஷன்கள் நிறுவ வேண்டியிருக்கும். போத்தலேயும் கிளாஸையும் காருக்குள் வைத்துக்கொண்டு போகும் போகும் இடமெல்லாம் வாயில் ஊற்றிக்கொள்ளுகிருர்களே அவர்கள்!" என்று சுட்டிக்காட்டினர் திரு இராசமாணிக்கம் மாநாட்டில் இருந்த சிலருடைய முகம் சுண்டிப்போயிற்று.

#### சிட்னியின் முடிவு

திரு சிட்னி டி சொய்ஸா திரு இராசமாணிக்கத்தின் கருத்தை ஏற்றுக்கொண்டு கொக்கட்டிச்சோலேயில் பொலீஸ் ஸ்டேஷன் வைக்க வாய்ப்பில்லே என்று தெரிவித்துவிட்டதாக அறியப்படுகிறது.

திரு எதிர்மன்னசிங்கம் "பொலீஸ் பொலீஸ்" என்று எங்கு சென்றலும் குரல் எழுப்பக் காரணம் என்ன?

காரணம் இதுதான்: பொலீஸ் பாதுகாப்பு இல்லாமல் திரு எதிர்மன்னசிங்கம் தமது தொகுதிக்குள்ளேயே நிம்மதியாக நடமாட முடியவில்லே.

#### எதிர்மன்னரின் பரிதாபம்

எங்கு சென்றலும் நக்கலும் கேலியும் செய்யும் கூட்டம் அவரை வளேத்துக் கொள்ளுகின்றது ஒருகாலத்தில் கொக்கட்டிச்சோலே என்னும் கிராமம் அவர் கோட்டையாக இருந்தது. "நான் உங்கள் இனத்தவன்; ஜாதிக்காரன்" என்று சொல்லிக் கொக்கட்டிச்சோலே மக்களே மயக்கிப் பாராளுமன்றக் கதிரையைப் பிடித்தார். ஆனல் பிரதிபலனுக அவர்களுக்கு எதுவித நன்மையும் செய்ததில்லே கொடுத்த வாக்குறுதிகளே நிறைவேற்றியதுமில்லே.

அவர்களேப் பயன்படுத்தித் தன் சுயநலத்தையும், சுய உணர்வையும், சுயவருமானத்தையும்தான் தேடிக்கொண்டார் இதனல் மக்கள் அதிருப்தியடைந்தார்கள்; விழித்துக்கொண்டார்கள்.

#### மக்கள் விரட்டுகிருர்கள்

"எங்கள் கிராமத்துக்குள் காலடி எடுத்து வைக்காதே! இனம், சனம், பந்து, மித்துரு என்று மாயவார்த்தைகள் பேசாதே. நாங்கள் மயங்கிய காலம் மலேயேறிவிட்டது" என்று சொல்லிவிட்டார்கள் கொக்கட்டிச்சோலேப் பெருங்குடி மக்கள்.

வாக்குக் கேட்டுப் போன இடத்தில் அவரைத் துரத்திவிட்ட காரணத்தினல்தான் கொக்கட்டிச்சோலே மக்களுக்கு குடிகாரப் பட்டஞ்சூட்டி, அவர்களேப் பொலீஸாரைக்கொண்டு அடக்கிப் பழிக்குப் பழி வாங்கலாம் என்று பொலீஸ் ஸ்டேஷன் கோரினர்போலும் திரு எதிர்மன்னசிங்கம்.

கொக்கட்டிச்சோலேயில் மட்டுமல்ல, எந்தக் கிராமத்துக்குச் சென்றலும் இந்தக் கதிதான் திரு எதிர்மன்னசிங்கத்துக்கு!

#### நீண்ட பயணம் அனுப்ப வைராக்கியம்

"போன தேர்தலில் நீர் வாக்குப்பண்ணியபடி தமிழ்க்கு சமஉரிமை கோரிப் போராடினீரா? ஆஸ்பத்திரி கட்டினீரா? தாதிமார் பாடசாலே அமைத்தீரா? துறை நீலாவணேக்கு குழாய்த் தண்ணீர் பெற்றுக்கொடுத்தீரா? வேறு கிராமங்களுக்கு மின்சாரம் பெற்றுக்கொடுத்தீரா? குறைந்தபட்சம் மண்டூர் துறைக்கு பாலங்கட்டும் வேலேயாவது செய்து முடித்தீரா? எந்த முகத்தோடு இங்கு வருகிறீர் மீண்டும் வாக்குக் கேட்டு? அரசாங்கத்தோடு ஒத்துழைத்தீரே, என்ன சாதித்தீர்? எமது தாழ்வு, தொகுதியின் தாழ்வு இனத்தின் தாழ்வு இவற்றின் மீது உமது சொந்த வாழ்வைத்தான் உயர்த்திக் கொண்டீர் அரை மந்திரிப் பதவிக்கு! வாக்குறுதிகளே நிறைவேற்றுத நீர் இங்கு ஏன் வருகிறீர்? திரும்பி நடையைக் கட்டும். 19ந் தேதி உம்மை நீண்ட பயணம் அனுப்பி வைக்கிருேம்" என்கிருர்கள் பட்டிருப்புப் பொதுமக்கள்.

# தனிச் சிங்களச் சட்டத்தை ஆதரித்த காரியப்பர்

## முஸ்லிம்கள் பௌத்தர்களாக மாறவேண்டும் என்றும் கூறலாம் அல்லவா?

### கல்முனேக் கூட்டத்தில் அஸீஸ்

**"தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட போது அதால் தமிழர்களுக்குத் தானே கஷ்டம், முஸ்லிம்களுக்கு அல்லவே என்று சொல்லி எம். ஈ. பியோடு சேர்ந்து அந்தப் படுபாதகமான சட்டத்தை ஆதரித்தவர் ஜனுப் காரியப்பர் இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பவாதி மதப் பிரச்னேகள் எழும்போது முஸ்லிம்கள் எல்லோரும் பௌத்தர்களாக மாறிவிட வேண்டும் என்று ஏன் தான் கூறமாட்டார்?"**

மேற்கண்டவாறு கேட்டார் ஜனுப் ஏ. அஸீஸ்.

கல்முனேத் தொகுதியில் தபால் மந்திரி கேட் முதலியார் எம். எஸ். காரியப்பரை எதிர்த்துப் போட்டியிடும் தமிழரசுக் கட்சி அபேட்சகர் ஜனுப் மஷுர் மௌலானுவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசினர். ஜனுப் அசனு மரைக்கார் தலேமை வகித்தார்.

#### யு. என். பியோடு சேருவார்கள்

ஜனுப் அஸீஸ் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"இன்று இந்நாட்டை ஒரு பெரிய நெருக்கடி எதிர் நோக்கி இருக்கிறது. இதற்கு ஜனுப் காரியப்பர், பொன்னம்பலம் போன்ற பதவி வேட்டைக்காரர்களும்; சேர் ராசிக் பரீத் போன்ற கட்சி விட்டுக் கட்சி மாறும் பச்சோந்திக் கூட்டங்களுமே காரணமாகும். இவர்களெல்லோரும் இப்பொழுது என்ன தான் கூறிய போதிலும் பாராளுமன்றத்துக்குச் சென்றதும் தம் கொள்கைகளே அடியோடு மாற்றிக் கொண்டு யு. என் பியுடன் இரண்டறக கலந்து விடக் கூடியவர்கள்.

#### சந்தர்ப்பவாதி காரியப்பர்

"ஆட்சிப் பொறுப் பேற்ற எம் ஈ. பி அரசாங்கம் சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றிய போது தமிழரசுக் கட்சியினர் காலிமுகப் பேஸ் மைதானத்தில் சத்தியாக்கிரகம் செய்தனர். ஆனல் உங்களுடைய எம். பி யான முதலியார் காரியப்பர் என்ன செய்தார் தெரியுமா? சிங்கள மொழிச் சட்டத்தால் கஷ்டப்படப் போகிறவர்கள் தமிழர்களேயன்றி முஸ்லிம்களல்லர் என்றும் பாதிக்கப்படபோவது தமிழ் மொழி தானே என்றும் கூறி சிங்கள அரசாங்கத்துடன் இணேந்து கொண்டார். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பவாதி மதப் பிரச்னேகள் எழும்போது முஸ்லிம்களெல்லோரும் பௌத்தர்களாக மாறிவிட வேண்டுமென்று கூற மாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?"

#### பதவிக்காக பல்லேக் காட்டோம்

ஜனுப் அஸீஸ் தொடர்ந்து கூறியதாவது:—

"இலங்கை ஜனநாயகக் காங்கிரசும், தமிழரசுக் கட்சியும் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடுகின்றன. இவ்விரு கட்சிகளிலும் இருப்பவர்கள் காரியப்பர் முஸ்தபா ஆகியோரைப் போல மந்திரி பதவிகளேக் கண்டு ஏமாறுபவர்களல்லர்."

ஜனுப் மஷுர் மௌலானு, திரு. எம். வேதநாயகம், ஜனுப் டி. எம். பீர் முகம்மது ஆகியோரும் பேசினர்கள்.

# பதவிப் பித்து யாருக்கு?

## 'ராஜிநாமாச் செய்யச் சொன்னேன் எஸ். ஜே. வி. செய்யவில்லேயே!'

### இப்படியும் ஒரு பிரசாரம்: ஜீ. ஜீ. யின் இறுதி முயற்சிகளில் ஒன்று

"பண்டாரநாயகாவின் எம். ஈ பி அரசாங்கம் 1956-ல் தனிச் சிங்கள மசோதாவைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்து சட்டமாக்கியபோது அதை எதிர்த்து தமிழ்ப் பிரதிநிதிகள் ராஜிநாமாச் செய்ய வேண்டும் என்று சொன்னேன். எஸ் ஜே. வி செல்வநாயகம் செய்தாரா? அவர் கட்சிக்காரர்கள் செய்தார்களா? இவர்களுக்கு எல்லாம் பதவி மோகம்" இப்படி ஒரு பிரசாரத்தை ஆரம்பித்திருக்கிருர் தனிப் பெருந் தலேவர் திருவாளர் ஜீ ஜீ. பொன்னம்பலம்.

பொய் பிறக்கும் வாயிலே மெய் வரும் என்று எதிர்பார்க்கும் ஏமாளித்தனம் தமிழ்ப் பொதுமக்களிடம் கிடையாது. பொன்னம்பலம் எதை அப்படிச் சொன்னலும் பதவிப் பித்து யாருக்கு உண்டென்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

பொன்னம்பலம் ராஜிநாமாச் செய்ய வேண்டும் என்று சொன்னர் என்றே வைத்துக்கொள்வோம். சரி, எஸ். ஜே. வியோ, அல்லது மற்றவர்களோ அப்படிச் செய்யவில்லே. இந்த நிலேயில் ஆலோசனே கூறிய பொன்னம்பலம் என்ன செய்திருக்கவேண்டும்? தாமே ராஜிநாமாச் செய்து எல்லோருக்கும் முன்மாதிரி காட்டியிருக்க வேண்டாமா? அதை அவர் செய்தாரா?

அவர் செய்த கைங்கரியம் இதுதான்: தம்மை வீராதி வீரர் சூராதி சூரர் என்று பிறர் கருதும்படியாக ஒரு கர்ச்சனே. "சிங்களம் மட்டும் சட்டம் நாட்டின் சட்டமாக இருக்கும்வரை பாராளுமன்றத்துள் நான் காலடி எடுத்து வைக்க மாட்டேன்" இப்படி மானமுள்ள தமிழ் மகன் மார்தட்டிக் கூறினன் என்று சொல்வதற்கில்லேயே! ஏன்? மேலே தந்த அதே வாக்கியத்தைத் தான் ஜீ. ஜீ. சொன்னர். ஆனல் செய்கையில் கோட்டை விட்டு விட்டாரே, அதனல் தான்.

(12-ம் பக்கம் பார்க்க)


பணம்! சேமியுங்கள்!! பணம்!!!

இன்றே நாஷனல் பாட்டரிகளேப்




பாவிக்க ஆரம்பித்து அதிக லாபம் பெற்று ஆனந்தியுங்கள்.

நீடியகாலம் பாவிக்கிறது



விலேயோ மிகக் குறைவு

இறக்குமதியாளர்கள்!

எஸ். யூ. முகம்மது ஹாஜியார்,

70, டாம் வீதி, கொழும்பு. போன்: 7653 ★ 14...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “என்னைத் தாக்க மும்முறை முயற்சித்தனர்

## சமசமாஜிகளின் ஜனநாயகம் இதுதானா?”

# சுதந்திரன் உதவி ஆசிரியர்

## திரு. சிங்கம் பெற்ற அனுபவம்

**கொழும்பு மத்திய தொகுதியில் திரு. பாலா தம்பு தோல்வியடைவார் என்றும், இலங்கையின் வட பகுதியில் சமசமாஜக் கட்சி ஒரு ஸ்தானம் கூட வெல்ல முடியாது என்றும், மேடை கிடைக்காமல் ஆடியடங்கிய சாண்டோ ருத்ரா சமசமாஜிகளின் தள்ளாடும் மேடை மீதேறி பச்சையான வகுப்பு வாததைக் கக்குகிறார் என்றும் நான் சுதந்திரனில் கட்டுரை எழுதி வெளியிட்டமைக்காக சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த காலிகள் சிலர் என்னை மும்முறை தாக்க முயன்றனர் பலாத்காரம் பிரயோகித்து வழிமறித்துப் பயமுறுத்தினர். தேர்தல் முடிந்ததும் பழி வாங்கப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

சமசமாஜக் கட்சியினர் வளர்க்கும் ஜனநாயகம் இதுதானா?

1. கடந்த வாரம் கன்னாரத் தெருவில் நடந்த சமசமாஜிகளின் தேர்தல் கூட்டம் ஒன்றுக்கு செய்தி திரட்டுவதற்காகச் சென்றிருந்த என்னை சமசமாஜத் தோழர்கள் மேற்படி தெருவிலுள்ள 71-ம் இலக்க இல்லத்துக்கு முன்னால் முதன் முறையாகத் தாக்க முயன்றனர்.

2. நான் தெருவில் டாக்ஸியில் செல்லும்போது வழிமறித்து டாக்ஸியை நிறுத்தி இரண்டாவது முறையாக என்னைத் தாக்க முயன்றனர்.

3. ஞாயிற்றுக்கிழமை (13-3-60) மாலையில் பார்பர் வீதியில் (Barber Street) நடந்த சமசமாஜிகள் கூட்டம் முடியும் தறுவாயிலும் தெருவில் வைத்து என்னை மூன்றாம் முறையாகத் தாக்க முயன்றனர்.

### எச்சரிக்கை

இப்போது தேர்தல் முடிந்ததும் என் மீது பழி வாங்குவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

### சிறிப் பயனில்லை

தோற்றுவிடுவோமே என்ற உண்மையை உள்ளம் உணர்ந்தும் கண்மூடித்தனமான கட்சிப் பற்று அதை ஏற்க மறுப்பதால் வெளிக் கிளம்பும் சீற்றம் இது. குறை காண்போரைப் பழிவாங்குவதைவிட தோல்வியை நிதானத்துடன் ஏற்கத்தான் அதிக நெஞ்சுரம் தேவை. எனவே சீறிப் பயனில்லை தோழர்களே. தோல்வியிலும் சிந்திக்கப் பழக வேண்டும். அதுதான் ஜனநாயகப் பண்பு ஸ்போர்ட்ஸ்மன்ஷிப் (Sportsmanship)!

அரசியலில் போட்டியிடும் எவரைப் பற்றியும் அபிப்பிராயம் வெளியிட எந்தப் பத்திரிகைக்கும் உரிமையுண்டு ஒரு பத்திரிகையாளனுடைய ஜனநாயக உரிமையை, அபிப்பிராய சுதந்திரத்தை, பயமுறுத்தல் மூலமும் பலாத்காரத்தின் மூலமும் தடுத்து நிறுத்திவிட விரும்புகின்றனரா சமசமாஜிகள்?

### எழுதிப் பார்க்கட்டுமே!

ஏன், இவர்களிடமும் பத்திரிகை உண்டுதானே! பேனா பிடிக்கத் தெரிந்தவர்கள் தானே இவர்களும்! எழுதட்டுமே! எழுதித்தான் பார்க்கட்டுமே! யார் வேண்டாமென்றார்கள்? பாவம், எழுதித் தோற்றவர்கள்! குறுக்கு வழியிலே, கோணல் பாதையிலே இறங்குகிறார்கள்.

### கூடவும் செய்வார்கள்

கொழும்பு மத்தியில் போட்டியிடும் ஒரு அபேட்சகர் தோற்றுப் போகக் கூடும் என்று எழுதியதற்காகவே இவர்கள் எழுதியவரைத் தாக்க எத்தனிக்கிறார்களே! அப்படியானால் அபேட்சகர் வெற்றி பெற்று, சமசமாஜக் கட்சி அரசாங்கத்தையும் அமைத்து, திரு பாலா தம்பு, அவர் பகல் கனவு காணுவது போல் தொழில் மந்திரியும் ஆகிவிட்டால், அப்புறம் பத்திரிகையாளர் பேனாவே பிடிக்க முடியாது என்று நம்புகிறோம்.



ஜனப் எம். ஐ. எம். அப்துல் மஜீத்

# நிந்தவூரில் தமிழரசு

## ஆதரவு அப்துல் மஜீத்துக்கு

### எஸ். ஜே. வி. வேண்டுகோள்

**நிந்தவூர்த் தொகுதியில் ஜனப் எம். எம். முஸ்தபாவை எதிர்த்துப் போட்டியிடும் ஜனப் எம். ஐ. எம். அப்துல் மஜீத்தைத் தமிழரசுக் கட்சி ஆதரிக்கிறது.**

தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் நிந்தவூர்த் தொகுதி வாக்காளர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் பின்வருமாறு கூறியிருக்கிறார்:—

“எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் நிந்தவூர்த் தொகுதியில் ஒரு அபேட்சகராகப் போட்டியிடும் ஜனப் எம். ஐ. எம். அப்துல் மஜீத் அவர்களை ஆதரிப்பதென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அபேட்சகர் நியமன சபை முடிவு செய்திருக்கிறது.

இந்த முடிவிற்கிணங்க நிந்தவூர்த் தொகுதியில் வாழும் தமிழரசுக் கட்சி அங்கத்தவர்கள், அபிமானிகள், ஆதரவாளர்கள் ஆகிய சகல தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் தங்கள் வாக்குகளை எவ்வகையிலும் பிரிவு படாமல், ஜனப் அப்துல் மஜீத் அவர்களுக்கே கொடுத்து, அவரே வெற்றியீட்டும் வண்ணம் கட்டுப்பாடாக நடந்து கொள்ள வேண்டுமென பணிவாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சமசமாஜ அபேட்சகரைப் பற்றி ஜனநாயக ரீதியான அபிப்பிராயம் தெரிவிப்பவருக்கு அடியும், உதையும் எச்சரிக்கையானால், சமசமாஜ அரசாங்கம் ஏற்பட்டு அதற்கு எதிராகப் பொது மக்கள் யாரும் அபிப்பிராயம் வெளியிட்டால்—குரல் எழுப்பினால்—அவர்களை சுவரோடு சார்த்திவைத்து துப்பாக்கியால் தான் சுடுவார்கள் என்று இப்போது தெரிகிறது.

### கொம்யுனிஸ்டுகளின் பண்புச் சிறப்பு

இதற்கு முன்பெல்லாம் நாம் எத்தனையோ சந்தர்ப்பங்களில் கொம்யுனிஸ்டு கொள்கைகளையும், கொம்யுனிஸ்டு தலைவர்களையும் காரசாரமாகத் தாக்கிப் பத்திரிகையில் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறோம். ஆனால் அவர்களில் யாரும் இந்த சமசமாஜக் குஞ்சுகளைப் போல் கொதித்துக் குதித்துப் பலாத்காரத்தில் இறங்கியதில்லை. ஜனநாயகப் பண்பில் இந்த வெறிபிடித்த சமசமாஜிகளைவிடக் கொம்யுனிஸ்டுகள் நிச்சயம் உயர்வானவர்கள் என்பது இப்போது தெரிகிறது.

வகுப்புக் கலவ... போது தமிழ் பேசும் மக்களை பெரிதும் தாக்கிக் கொள்ளையும் கொலையும் செய்தவர்கள் அநேகமாக சமசமாஜத் தொழிலாளர் கும்பல்தான் என்று அப்போது சொல்லப்பட்டது. ஆனால் நாம் அதை அப்போது நம்பவில்லை. சமசமாஜிகள் மேடையில் பேசுவதுபோல், பொதுமக்கள் கண்ணில் வேஷம் போடுவது போல் இனவெறியோ வகுப்புவாத வெறியோ, கொள்கை வெறியோ, அரசியல் வெறியோ, ஆதிக்க வெறியோ அற்ற பண்பாளராகத்தான் இருப்பார்கள் என்று நம்பியிருந்தோம். அந்த நம்பிக்கை தவறானது என்பதும் இப்போதுதான் தெரிகிறது.

யு என். பி. கட்சி அபேட்சகரான டாக்டர் எம். வி. எம். கலீல் தமது தேர்தல் பிரசுரம் ஒன்றில் பின்வருமாறு கூறுகிறார்:

### கலீல் தரும் தகவல்

“சமசமாஜக் கட்சி கடைசி வரையும் காப்பாற்றும் என மனப்பால் குடித்திருந்த தமிழ் பேசும் சிறுபான்மையினருக்கு அக்கட்சியினரின் சமீபகால நடவடிக்கைகள் ... [illegible] ...

(12-ம் பக்கம் பார்க்க)

# மலைநாட்டுத் தமிழரை காட்டிக் கொடுத்த ஜீ. ஜீ.

## இப்போது நீலிக் கண்ணீர் வடிக்கிறார் தமிழரசாரைக் குறை கூறுகிறார்:

### உடன்படிக்கையில் அவர்களைக் கைவிட்டுவிட்டார்களாம்

தமிழரசுக் கட்சியினர் தாம பண்டாரநாயகாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் மலைநாட்டுத் தமிழரைக் கைவிட்டுவிட்டார்களாம் தனிப்பெருந் தலைவர் கண்டிக்கிறார். இல்லை மலை நாட்டுத் தமிழருக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறார்.

இவர் யார் அதற்கு? மலைநாட்டுத் தமிழரை அடுத்து அடுத்துக் காட்டிக் கொடுத்தவர் அல்லவா இவர்? வாக் வாக்குறுதிகளை அளித்துவிட்டு அவற்றைக் காற்றில் பறக்கவிட்ட கண்ணியம் மிக்க மனிதர் அல்லவா இவர்?

மலை நாட்டுத் தமிழர் பிரதிநிதித்துவ ஸ்தாபனமான இலங்கை இந்தியர் காங்கிரஸுக்கு (அப்போதய பெயர்) 1947-ல் திருவாளர் ஜீ ஜீ பொன்னம்பலம் கையொப்பமிட்டு அளித்த வாக்குறுதிகளையே காப்பாற்றவில்லையே! இதோ அந்த வாக்குறுதிகள்:—

(1) இலங்கைவாழ் இந்தியர்களது உரிமைகளுக்கும் அந்தஸ்துக்கும் இலங்கை இந்திய காங்கிரஸ் கோருவதை நானும் ஆதரிப்பதாக உறுதியளிக்கிறேன். விபரங்களாவன:—

(அ) அரசியல் வாக்குரிமை சாதாரணமாக ஆறுமாதகாலம் வசித்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

(ஆ) இலங்கையில் ஐந்து வருட காலம் வசித்து இலங்கையையே தாயகமாக, நிரந்தரவாசம் செய்யுமிடமாகக் கொள்ளப்போவதாகக் கூறும் பிரஜைகளுக்கு, மற்றும் இலங்கையருக்குச் சமமான பிரஜா உரிமை வழங்கப்படவேண்டும்.

(இ) மேற்கூறப்பட்ட யோக்கியதாம்சமற்றவர்கள் பிற்காலத்தில் குறிக்கப்பட்ட ஒருகால எல்லைக்குள் அதனை அடையக் கூடியதாக இடமளிக்க வேண்டும்.

(ஈ) கிராமப் பகுதிகளில் வசிக்கும் எல்லோருக்கும் கிராமக் கமிட்டிகளின் சட்டப்படி பாரபட்சமின்றி வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும்.

(2) இலங்கையின் கண்ணுள்ள எல்லா மக்களுக்கும் பொதுவாகவும், தொழிலாளர்களுக்கு குறிப்பாகவும் அவர்களது ஆத்மீக சாத்வீக, பொருளாதார சமூக துறைகளில் உழைப்பதாகவும் இலங்கை இந்தியத் தொழிலாளர்களுக்குப் பாரபட்சமாகவும் விரோதமாகவும் வரும் தடைகளை விலக்கியோ இல்லாமல் செய்தோ அவர்கள் நலன்களுக்கான வழியில் பாடுபடவும் நான் தொண்டாற்றுவதாக உறுதியளிக்கிறேன்.

ஜீ. ஜீ. பொன்னம்பலம்.
(கையொப்பம்)

16. ஜூலை 1947.

இவர்தான் இப்போது மலை நாட்டுத் தமிழர்களுக்காகப் பரிந்து தமிழரசுக் கட்சி உடன் படிக்கையில் ஏதோ மலை நாட்டுத் தமிழரைக் கைவிட்டு விட்டதாகப் பூச்சாண்டி காட்டுகிறார்.

உடன்படிக்கையில் உண்மையில் அது நடந்ததா? கிடையாது. மலைநாட்டுத் தமிழர் விஷயத்தை மேலும் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்வது என்ற அடிப்படையிலேயே அந்தப் பிரச்னை உடன்படிக்கையில் சொல்லப்பட்டது. அவ்வளவுதான்.

இது விஷயம் மலை நாட்டுத் தமிழருக்கு புரிகிறது. அவர்கள் பிரதிநிதித்துவ ஸ்தாபனத்துக்கு தெரிகிறது. அதன் பலனாக இரு கட்சிகளுக்குமிடையே உள்ள நல்லுறவு பலப்படுகிறது. இதன் பிரதிபலிப்பாகவே பொதுத் தேர்தலில் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் அபேட்சகர்களை தமிழரசுக் கட்சி ஆதரிக்கிறது. தமிழரசுக் கட்சி அபேட்சகர்களை அந்த ஸ்தாபனம் ஆதரிக்கிறது.


சி. சி. சி.

தெங்குப் பசளைக் கலவைகள்



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக.

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு, வரையறுக்கப்பட்டுள்ளது.

தபாற் பெட்டி 33, கொழும்பு. CCC625


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமைச்சர் பதவிக்கு எஸ். ஜே. வி. யை

## தாம் சிபார்சு செய்ததாக ஜீ. ஜீ. கொக்கரிப்பு!

## சேனநாயகா அவரை வேண்டாம் என்று சொன்னதாக அண்டப் புளுகு

## வலிய வந்த பதவிகளை ஏற்காது உதறியவர் செல்வநாயகம்

பந்தியிலிருந்து சாப்பிடும் சில ஆவலாதித் தம்பிரான்கள் ஒரு தந்திரத்தைக் கையாளுவதுண்டு. தமக்குப் பருப்போ, சாம்பாரோ அல்லது சோறோ தேவைப்பட்டால், தமக்குத் தேவைப்படுவதாகக் காட்டிக்கொள்ளமாட்டார்கள்.

பரிமாறுபவனைப் பார்த்து "ஏய், சாம்பார்! இங்கே கொண்டுவா. இந்த ஐயாவுக்கு கொஞ்சம் போடு" என்று பக்கத்திலிருந்து சாப்பிடுவரின் இலையைச் சுட்டிக் காட்டுவார்கள்.

பக்கத்திலிருப்பவரோ "வேண்டாம், வேண்டாம். எனக்குத் தேவையில்லை. நீ கொண்டு போ அப்பா" என்று கூறுவார்.

உடனே அந்த ஆவலாதித் தம்பிரான் கொஞ்சம் மெதுவான குரலில் "சரி, சரி இங்கே கொஞ்சம் ஊற்றி விட்டுப் போ" என்று தமது இலையைக் காட்டுவார்.

விருந்து வைபவங்களில், கலியாண வீடுகளில் சிலர் இப்படியான மானங்கெட்ட காரியங்களை அடிக்கடி செய்து தங்கள் தொப்பையை நிறைத்துக்கொள்வதுண்டு. இதை மன்னித்து விடலாம்.

ஆனால் இப்படியான இழிந்த காரியம் செய்யும் ஒரு போக்கற்ற மனுஷன் "அவருக்கு சாம்பார் ஊற்றும்படி சொன்னேன். அவன் மறுத்து விட்டான். எனவே எனக்கு ஊற்றும்படி கேட்டு வாங்கிக் கொண்டேன்" என்று சொல்லிப் பெருமையடிப்பானானால் அவனுடைய அற்பத்தனத்தையும், மூடத்தனத்தையும் பற்றி நாம் வியாக்கியானம் கூற வேண்டுமா?

### வெட்கம்! வெட்கம்!!

அகில இலங்கை ஆனைப் பந்திக் காங்கிரஸின் தலைவரான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் இரண்டு வாரங்களுக்கு முன்பு காங்கேசன் துறை வெளிச்ச வீட்டு மைதானத்தில் பேசியதாக ஒரு செய்தி தினப்பத்திரிகைகளில் வெளி வந்தது.

"காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகா தமது மந்திரி சபையில் தமிழப் பிரதிநிதிகளில் ஒருவருக்கு மந்திரிப் பதவி கொடுக்கக் கருதிய போது நான் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை சிபார்சு செய்தேன். திரு.

### தனிப்பெருந் தலைவர் மந்திரியான அந்தரங்கம் இதோ

சேனநாயகா அதை விரும்பாத பட்சத்திலே தான் நான் மந்திரிப் பதவி யேற்றேன்"

என்று திரு. பொன்னம்பலம் மேற்படி கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

இந்தப் பேச்சைப் படிக்கும்போது பந்தியிலிருந்து சாம்பார் வாங்கிய ஆவலாதித் தம்பிரானின் ஞாபகம் தான் வருகிறது. வெட்கம்! வெட்கம்!

### தோலுரிக்க வேண்டாமா?

அந்த நேரத்திலேயே தமிழ் காங்கிரஸின் தலைவராக இருந்தவர் பொன்னம்பலம். அவருடைய சிபார்சை திரு. சேனநாயகா ஏற்கவில்லையென்பதை உண்மையென்றே வைத்துக் கொள்வோம். அப்படியானால் அதன் பொருள் என்ன? கேவலம், பொன்னம்பலத்தின் பேச்சுக்கு, அவருடைய சிபார்சுக்கு திரு. சேனநாயகா தூளி கூட மதிப்பு வைத்திருக்கவில்லையென்பது தானே? இந்த நிலையில் மானமுள்ள எவனாவது, "அவருக்குக் கொடுக்கா விட்டால் பாதகமில்லை, ஐயனே. அடியேனுக்குத் தந்தருளுங்கள் மந்திரிப் பதவியை" என்று கை நீட்டுவானா?

"அப்படித்தான் நான் கையேந்திப் பெற்றேன்" என்று மானம், ரோசம், வெட்கம் எதுவும் இல்லாமல் கூறுகிறாரே இந்தத் தனிப்பெருந் தலைவர், தமிழினத்தின் மானத்தையே போக்கி விட்ட இந்த ஆவலாதித் தம்பிரானை அரசியலிலே தோலுரிக்க வேண்டாமா தமிழ் பேசும் மக்கள்?

### திரு. டி. எஸ். போட்ட திட்டம்

உண்மையில் நடந்தது என்ன வென்றால் திரு டி. எஸ். சேனநாயகா திரு. பொன்னம்பலத்துக்கு மந்திரிப் பதவி கொடுக்க ஆரம்பத்தில் ஒருபோதும் விரும்பவில்லை. முதலில் அவர் போட்ட திட்டம் தமிழ் காங்கிரஸிலே எப்படியாவது ஒரு பிளவை ஏற்படுத்தி விட வேண்டும் என்பது தான். அத்தோடு திரு. பொன்னம்பலத்தை தமிழ் பேசும் மக்கள் கண்ணில் ஒரு செல்லாக் காசு ஆக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார்.

அதற்கு அவர் கையாள விரும்பிய வழி என்ன தெரியுமா? திரு. பொன்னம்பலத்தை ஒருபுறம் ஒதுக்கி விட்டு. அவருக்குப் பின்னேயுள்ள யாரையாவது பிடித்து மந்திரியாக்கி விட முடியுமா என்று அவர் பார்த்தார். திரு எஸ். ஜே. வி செல்வநாயகத்தை ஒரு மந்திரியாகவும், இன்னொருவரை உதவி மந்திரியாகவும் ஆக்கி விட்டால் ஒரே கல்லில் இரண்டு பறவைகளை விழுத்தி விடலாம் என்று அவர் கருதினார்.

### சின்னாபின்னம் ஆகிவிடும்

அதாவது திரு. செல்வநாயகம் மந்திரி பதவி ஏற்க ஒப்புக்கொண்டால் தமிழ் காங்கிரஸ் பிளவு பட்டு சின்னாபின்னமாகி விடும் என்பது ஒன்று. அதே சமயத்தில் திரு. செல்வநாயகத்தின் செல்வாக்கு உயர்ந்து திரு. பொன்னம்பலம் தமது தமிழர் தலைமைப் பதவியை இழந்து பின்னணிக்குத் தள்ளப் பட்டு விடுவார் என்பது மற்றொன்று.

இந்த சூழ்ச்சியை மனதில் [illegible] கத்திடம் இரகசியத் தூது அனுப்பினார் திரு. டி. எஸ். சேனநாயகா.

### மந்திரிப் பதவி ஏற்க முடியாது

திரு. செல்வநாயகம் இன்று போலவே அன்றும் நிலை தவறாதவராக, நெறி தவறாதவராக, உறுதி தளராதவராக நிமிர்ந்து நின்றார். "முடியாது. ஒருபோதும் நானோ, தமிழ் காங்கிரஸைச் சேர்ந்த வேறு யாருமோ மந்திரி பதவி ஏற்க முடியாது. தமிழ் பேசும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியிலிருந்து இம்மியும் வழுவ முடியாது" என்று தூது வந்த எல்லாப் பிரமுகர்களிடமும் கண்டிப்பாகச் சொல்லி விட்டார் திரு. செல்வநாயகம். இந்த விவரம் எல்லாம் திரு. பொன்னம்பலம் நன்கு அறிவார்.

திரு. செல்வநாயகம் மந்திரி பதவியை ஒருபோதும் ஏற்க மாட்டார் என்பதை அறிந்ததும் திரு. டி. எஸ். சேனநாயகா மற்றொரு கணையைத் தொடுத்தார் இந்தக் கணை மூலம் திரு. பொன்னம்பலத்தை முற்றாக அழிக்க முடியாவிட்டாலும், தமிழ் காங்கிரஸின் பலத்தை முற்றாக முறியடித்து விடலாம் என்று நம்பினார். மேலும் பிரமுகர்களைத் தூது அனுப்பினார். அப்படிச் சென்ற பெரியார்கள் திரு செல்வநாயகத்திடம் என்ன சொன்னார்கள் தெரியுமா?

### ஆசை வார்த்தை

"திரு. செல்வநாயகம் அவர்களே, தாங்கள் ஒரு மதிப்பு வாய்ந்த கண்ணியவான். தமிழ் மக்கள் சிங்கள மக்கள் ஆகிய எல்லோருடைய மத்தியிலும் நல்லவர், நேர்மையானவர் என்று பெயர் எடுத்திருக்கிறீர்கள். சட்டத்துறையில் மிக உன்னதமான ஒரு ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறீர்கள். ஒரு கிங்ஸ் கௌன்சலாக (அந்த நேரத்தில்) இருக்கிறீர்கள். தாங்கள் எதற்காக பயனற்ற அரசியல் துறையில் ஈடுபட்டு நேரத்தையும், சக்தியையும், பொருளையும், மதிப்பையும் இழக்க வேண்டும்? அதுவும், பொன்னம்பலம் போன்ற ஒரு நாணயமற்ற அரசியல் சூதாட்டக்காரனுக்குப் பின்னால் ஒட்டிக் கொண்டு நிற்கிறீர்களே! தங்கள் தகுதிக்கும் பெருமைக்கும் இது ஏற்றதா? பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகா நல்ல மனிதர். தங்களிடம் மிக்க மதிப்பு வைத்திருக்கிறார். தாங்கள் விரும்பினால் தங்களை ஒரு சுப்ரீம்கோட் நீதியரசராக நியமிக்க விருப்பமுடையவராயிருக்கிறார். அரசியலை விட்டொழியுங்கள். அந்த உன்னத பதவியான உயர் நீதிமன்ற நீதியரசர் பதவியை ஏற்றுக் கொள்ளுங்கள். தங்களுக்கு மங்காப் புகழும், மதிப்பும், கௌரவமும் ஏற்படும். தமிழ் இனமே தங்கள் பதவியால் பெருமையுறும். இலங்கையும் சட்டத் துறையும் தங்கள் நடுநிலை தவறாச் சட்டத் தீர்ப்புகளால் உயர்ச்சியுறும்" என்றெல்லாம சொன்னார்கள்.

### தகுந்த அத்தாட்சி


இவ்வாறு திரு. செல்வநாயகத்திடம் தூது சென்ற பிரமுகர்களுள் பிரபல வழக்கறிஞரும், காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகாவின் அந்தரங்க சட்ட ஆலோசகராயிருந்தவருமான திரு எச். வி. பெரேராவும் ஒருவர் என்று நாம் தெரிந்து பெயர் குறித்து அத்தாட்சிப்படுத்தக் கூடியவர்களாயிருக்கிறோம். இந்த விவரங்களும் திரு. பொன்னம்பலத்துக்குத் தெரிந்தவையே.

### எஸ். ஜே. வி. பதில்

மேற்கண்டவாறு தூது வந்த சிங்கள நண்பர்களிடமும், அபிமானிகளிடமும், பிரமுகர்களிடமும் திரு. செல்வநாயகம் பின் வருமாறு கூறினார்:

"உங்கள் அன்புக்கும் அபிமானத்துக்கும் நன்றி. திரு. பொன்னம்பலத்தை நாங்கள் தலைவராக ஏற்றுப் பொது மக்களுக்குப் பல வாக்குறுதிகளைக் கொடுத்து பாராளுமன்றத்துக்கு வந்திருக்கிறோம். இந்த நிலையில் நான் எங்கள் கட்சித் தலைவரைக் கைவிட்டு வரவோ அவரை மறுதளிக்கவோ

(13-ம் பக்கம் பார்க்க)



கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று அரியாலையில் நடைபெற்ற ஒரு தமிழரசுக் கட்சிக் கூட்டத்துக்கு யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சி அபேட்சகர் திரு. கதிரவேற்பிள்ளை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படும் காட்சி.


## அன்பர்களே

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானால் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

**ஸ்பேமடோன் கொம்பவுண்ட்**

**(Spermatone Compound)**

**ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின்** மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25

வி. பி. பி. தனி.

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,

டாக்டர்

**'மோடர்ன் கிலினிக்'**

(MODERN CLINIC)

255, காலி ரோட், கொழும்பு-4.

பம்பலப்பிட்டிய கண்வண்ட் எதிரில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்த பாம்பை ஓங்கி அடிக்கும் வீரச் செயல்:

# தோன்றி மறைந்த உடன்படிக்கை பற்றி

# ஒருங்கே ஓலமும் ஒப்பாரியும்

## காட்டிக் கொடுத்துவிட்டதாம்

## கூச்சலிடுகிறார் ஜீ. ஜீ. பொன்னம்பலம்

## சிங்களவரை விற்றுவிட்டது-இலங்கையை தமிழரிடம் கையளித்து விட்டது என்கிறது யு. என். பி.

### 'முதலடி' என்ற பெயரில் நூலும் வெளியிட்டது

பொதுத் தேர்தல் நாள் நெருங்க நெருங்க அகில இலங்கை ஆலைப் பந்தி காங்கிரஸின் தனிப் பெருந் தலைவர் திருவாளர் ஜீ ஜீ பொன்னம்பலத்துக்கு அதிகமதிகம் கிலி பிடித்து வருகிறது. தமக்கு தோல்வி நிச்சயம் என்ற நிலைமையை வெளிக் காட்டக் கூடாது என்ற காரணத்தால் மேடைக்கு மேடை இல்லாததையும் பொல்லாததையும் அடித்து முழக்குகிறார்.

முன்பு ஒரு கால் பேசி ஓய்ந்த விஷயத்தை இப்போது புதிதாகப் பிடித்துத் தொங்கிக் கொண்டு கூத்தாடுகிறார் பண்டாரநாயகா-செல்வநாயகம் உடன்படிக்கை உருவாக்கிக் கருவிலேயே அது மறைந்துவிட்டது. உடன்படிக்கை உதயமாகக் காரணகர்த்தர்களாயிருந்தவர்களுள் ஒருவரான பிரதமர் பண்டாரநாயகா தாமே அந்த உடன்படிக்கையை இல்லா தொழித்துவிட்டு தாமும் உலக வாழ்விலிருந்து விடை பெற்றுக் கொண்டார். இந்த நிலையிலும் தனிப் பெருந் தலைவர் தோன்றி மறைந்த உடன்படிக்கை பற்றி ஒப்பாரி வைக்கிறார்.

#### ஜீ. ஜீ. கருத்து

சுருக்கமாகச் சொல்வதானால் பண்டாரநாயகா-செல்வநாயகம் உடன் படிக்கை சிங்களவர்களுக்கு சாதகமானது என்பதும் தமிழர்களுக்கு பாதகமானது என்பதும் ஜீ. ஜீ. தெரிவித்துவரும் கருத்தாகும். இந்த உடன்



'முதலடி' என்ற பெயரில் யு என். பி. வெளியிட்ட நூலின் மேலட்டை

படிக்கையைச் செய்து கொண்டதன் மூலம் தமிழரசுக் கட்சி இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தை சிங்களவர்களுக்கு காட்டிக் கொடுத்துவிட்டது என்று கட்சி மீது குற்றம் சாட்டுகிறார். காட்டிக்கொடுத்தவர் யார்? தமிழ் பேசும் இனத்

வன்னியூரான்

தின் மானத்தை மந்திரிப் பதவிக்காக விலை கூறி விற்றவர் யார்? அடிமை நிலையை வரவழைத்தவர் யார்? ஜீ. ஜீ யும் அவர்தம் சிஷ்ய கோடிகளும் இல்லையா? அப்படிப்பட்டவர் மற்றவர்கள் மீது குற்றம் சுமத்துவது வேடிக்கைதான். எனினும் வாசகர்களின் விளக்கத்துக்காக உடன்படிக்கைபற்றி ஒரு சில விஷயங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

#### முதலடி என்ற புத்தகம்

பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்ட நாட்களில் யு. என். பியினரால் ஒரு சிறு புத்தகம் பிரசுரிக்கப்பட்டு சிங்கள மக்களிடையே ஏராளமாக விநியோகிக்கப் பட்டது. புத்தகத்தின் பெயர் "முதலடி" (First Step). புத்தகத்தின் மேலட்டை இங்கு படம் பிடித்து வெளியிடப்பட்டிருக்கிறது.

இப் பிரசுரத்தின் நோக்கம் பண்டார நாயகா செல்வநாயகம் ஒப்பந்தம் தமிழ் பேசும் மக்களுக்கு சாதகமாக அமைந்துவிட்டது என்று சிங்கள மக்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களைத் தூண்டிவிடுவதாகும். மற்றும் ஒப்பந்தம் அமுல் செய்யப் படுவதை எந்த விதத்திலும் தடுத்துவிட வேண்டும் என்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தார்கள் யு. என். பியினர்.

#### புத்தகத்தில் உள்ள படம்

"Every home should hang up this map and not take it down, until the Bandaranayake—Chelvanayakam pact is abrogated"

அதாவது "ஒவ்வொரு குடும்பமும் இந்தப் படத்தை தங்கள் வீட்டில் தொங்க விட வேண்டும்; பண்டாரநாயகா—செல்வநாயகம் உடன்படிக்கை அழிக்கப்படும் வரை அப்படத்தை கீழே யிறக்கக் கூடாது" என்று கூறும் வாக்கியம் பிரசுரத்தில் தரப்பட்ட இலங்கை படத்தின் அடியில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

உடன்படிக்கை இலங்கையில் தமிழரசைநிறுவுந் திட்டத்தின்முதலடிஎனச்சிங்கள இனத்திற்கு எச்சரிக்கை விடுவதாக அமைந்தது பிரசுரத்தில் தரப்பட்ட படம், அதாவது கூடார்த்தச் சித்திரம். தமிழரசுக் கட்சி முதலடி வைத்து இலங்கையின் பெரும் பாகத்தைத் தன தாக்கிக் கொண்டது; மற்ற அடியும் வைத்தால் இலங்கை பூராவையுமே சொந்தமாக்கிக் கொள்ளும் என்பது கூடார்த்தச் சித்திரத்தின் பொருள்.

#### பிரதேச சபைகள்

உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட இரண்டு முக்கிய அம்சங்களை எடுத்து அவற்றிற்கு வியாக்கியானம் கொடுத்து நன்கு கண்ணில் படத் தக்கவாறு புத்தகத்தில் பிரசுரித்திருக்கிறது யு. என். பி. அந்த இரண்டு அம்சங்களில் ஒன்று பிரதேச சபைகளிடம் ஒப்படைக்கப்படும் என்று கூறப்பட்ட விசேஷ அதிகாரங்கள். மற்றது குடியேற்றத் திட்டம் பற்றிய ஒழுங்குகள். இன்னும், தமிழ் மொழிக்கு இவ்வுடன்படிக்கைப்பிரகாரம் அளிக்கப்பட விருந்த அந்தஸ்து பற்றியும் யு. என். பி. தனது பிரசுரத்தில் பல விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறது.

பிரதேச சபைகளின் விசேட அதிகாரங்கள் பற்றி யு. என். பி. தனது பிரசுரத்தில் தெரிவித்துள்ள கருத்து "இது சமஷ்டி முறையான ஒரு இராச்சியத்துக்கான ஏற்பாடல்லவா?" என்பதாகும்.

(10-ம் பக்கம் பார்க்க)

### உடன்படிக்கை

#### ஏன் முறித்தனர்?

பண்டா செல்வா உடன்படிக்கை தமிழ் பேசும் மக்களுக்கு பாதகமானது என்கிறார் ஜீ. ஜீ. அப்படியானால் சிங்களவர்கள் ஏன் எதிர்த்தனர்? பிக்குகள் ஏன் எதிர்த்தனர்? யு. என். பியினர் ஏன் எதிர்த்தனர்? பண்டாரநாயகாதானும் ஏன் அதை முறித்தார்?

உண்மை இதுதான்: உடன்படிக்கை தமிழ் பேசும் மக்களுக்கு சாதகமாக அமைந்துவிட்டதை எல்லோரும் உணர்ந்தனர். சட்டமேதையான திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமிழ் பேசும் இனத்தின் நலனுக்காக விரித்த வலையில் தாம் விழுந்துவிட்டதைப் பின்னர்தான் பிரதமர் பண்டாரநாயகா தெரிந்து கொண்டார். எனவே உடன்படிக்கைக்கு சிங்களவர்களிடமிருந்து எதிர்ப்பு கிளம்பியதும் குறிப்பாக பிக்குகள் திரண்டு எழுந்தபோது உடன்படிக்கையை முறித்தெறிந்து அவர்கள் எல்லோரையும் திருப்திப் படுத்தினார். தாமும் சாந்தி அடைந்தார்.

## சிங்களப் பகுதியிலுள்ள தமிழ் பேசும் வாக்காளர்கள்

## பொதுத் தேர்தலில் யாரை ஆதரிப்பது?

### தமிழரசுக் கட்சி தரும் விளக்கம்

[சுதந்திரன் நிருபர்]

எதிர் வரும் பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த மற்றைய ஏழு மாகாணங்களிலும் வாழும் தமிழ் பேசும் மக்கள் தங்கள் தங்கள் வாக்குகளை யாருக்கு அளிப்பது எந்தக் கட்சியை ஆதரிப்பது என்ற வினாவை விசேஷமாக மலை நாட்டுப் பகுதியில் உள்ளவர்கள் சுதந்திரனுக்கு எழுதிக் கேட்கிறார்கள்.

இது சம்பந்தமாக தமிழரசுக் கட்சியின் மேலிடத்தில் சுதந்திரன் நிருபர் வினவிய போது கிடைத்த விளக்கம் பின்வருமாறு;

#### விளக்கம்

"இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் எல்லாச் சிங்களக் கட்சிகளும் ஒன்று தான். அவை எதுவும் தமிழ் பேசும் மக்களுக்கு விடுதலையோ விமோசனமோ பெற்றுக் கொடுக்கப் போவதில்லை. 'தன்கையே தனக்குதவி' என்று தான் தமிழ் மகன் போராட வேண்டியவனாயிருக்கிறான்.

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தமிழரசுக் கட்சிக்குத்தான் வாக்களிக்க வேண்டும். மற்ற ஏழு மாகாணங்களிலும் உள்ள தமிழ் மக்கள், எங்கெங்கு மலை நாட்டுத் தமிழ் மக்கள் ஸ்தாபனமான இலங்கை ஜனநாயக காங்கிரஸின் அபேட்சகர்கள் போட்டியிடுகிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கே வாக்களிக்க வேண்டும்.

#### நசுக்கி விடுவார்கள்

"சிங்களக் கட்சிகளுள் யு. என். பி., எம். ஈ. பி., எஸ். எல். எப். பி., இரியகொல்லை

(14-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம்
சிங்களம்
ஆங்கிலம் சிங்களம் தெரியாது என்ற கவலையை ஒழியுங்கள்.
இன்றே அற்லஸ் ஹோலில் ஆங்கிலம் சிங்களம் தபால்மூலம் கற்று வாழ்வில் உயர்வடையுங்கள். இன்றே இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.

ஆசிரிய கலாசாலை
பிரவேசப்பரீட்சை 1960
இப்போட்டிப் பரீட்சைக்கு இன்றே படிக்கத் தொடங்குங்கள்.
- பொது விஞ்ஞானம்
- தூய கணிதம்
- தமிழ்ப் பாஷை
- சரித்திரம் / பூமிசாஸ்திரம்
- பொது விவேகம்
- எண் கணிதம்

ஜீ. சி. ஈ.
ஆகஸ்ட்/டிசம்பர் மாதங்களில் நடக்கும் கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி பெறுவது நிச்சயம்.
பாடத் திட்டம் / பரீட்சை விதிகள் உள்ளடங்கிய விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.
விபரங்கட்கு

அற்லஸ் ஹோல்
723, மருதானை ரோட், கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1960 மார்ச் மாதம் 20ந் ஞாயிறு

194எ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.
தொலைபேசி எண் 3411. த.பெ. 1183


# மார்ச் 19

மார்ச் 19. எதிர்பார்த்திருந்த மார்ச் 19 வந்து விட்டது!

இம்மாதம் 19ந் தேதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை ஆட்சியாளரும் சிங்களப் பொதுமக்களும் ஒரு சாதாரண பொதுத் தேர்தலாகக் கருதலாம். தாம் விரும்பிய ஒரு பிரதம மந்திரியையும், ஒரு அரசாங்கத்தையும் தேர்ந்தெடுக்கும் ஒரு வைபவமாக அவர்கள் பொதுத் தேர்தலைக் கொண்டாடலாம்.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் நிலைமை வேறு இந்த நாட்டில் சகல மனித உரிமைகளையும் பெற்று வாழ்வதா அன்றி அடிமைப்பட்டு மாள்வதா என்ற சிக்கலான பிரச்னையைத் தீர்ப்பதற்கான வழியில் அவர்கள் இந்தத் தேர்தலைப் பயன்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

ஒற்றையாட்சி வேண்டுமா அல்லது கூட்டாட்சி வேண்டுமா என்ற வினாவுக்கு விடையிறுப்பதுபோல தேர்தல் முடிவுகள் ஒரே கருத்தைப் பிரதிபலிப்பனவாய் இருக்க வேண்டும்.

எனவேதான், "தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டும் சரித்திர முக்கியத்துவம் நிறைந்த ஒரு மாபெரும் சர்வஜன வாக்கெடுப்பாக மார்ச் 19ந் தேதிப் பொதுத் தேர்தலை நாம் பாவிக்க வேண்டும். ஒரே குரலில் தமது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை வலியுறுத்த இலட்சோப இலட்சம் தமிழ் பேசும் மக்கள் திரண்டுவிட்டார்கள் என்பதை எடுத்துக்காட்ட வேண்டும்." இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் இந்த நாட்டில் ஒரு மலர்ப் பாதையாக இருக்கப்போவதில்லை. உரிமைப் போர் தொடுப்பவர்கள் அதிகாரம் என்ற நெருப்பைத் தீண்டவும், அடக்குமுறையென்ற காற்றைத் தாண்டவும் வல்லவர்களாகவும், அதேசமயம் நல்லவர்களாகவும் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் கட்டுக்கோப்பாக நின்று நாம் இழந்துவிட்ட உரிமைகளுக்காகக் குரல் எழுப்பி, அவசியமானால் அஹிம்சைப் போர் தொடுத்து, தமது விவேகத்தாலும், தியாகத்தாலும் தமிழ் பேசும் இனத்துக்கு வாழ்வளிக்கக்கூடிய நேரிய தலைவர்கள், சீரிய தொண்டர்கள் நமது பாராளுமன்றப் பிரதிநிதிகளாக நமக்குத் தேவை.

இந்த உண்மையை மனதில் வைத்து ஈழத் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு தமிழ் பேசும் வாக்காளரும் மார்ச் 19ந் தேதித் தேர்தலை உன்னதமான முறையில் பயன்படுத்த வேண்டும்.

பணத்துக்கோ, பண்டத்துக்கோ, மதுவுக்கோ, இலஞ்சத்துக்கோ கட்டுப்பட்டு, மதிமயங்கிப் பொன்னான வாக்குகளை மண்ணாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சில்லறைப் பிரச்னைகளோ, கிராம விவகாரங்களோ, பந்து, மித்திர பாசங்களோ இப்புனித கடமையில் குறுக்கிடக் கூடா.

மேல்நாட்டு நல்லறிஞன் ஒலிவர் வெண்டல் ஹோம்ஸ் என்பான் ஆண்டவனைப் பார்த்து பின்வருமாறு கோரினான்:

God give us men!
A time like this demands great hearts,
Strong minds, true faith and willing hands!
Men whom the lust of office does not kill;
Men whom the spoils of office cannot buy;
Men who possess opinion and a will;
Men who have honour, men who will not lie.
—*Oliver Wendell Holmes.*


இதன் தமிழாக்கம் பின்வருமாறு:

இப்படியான ஒரு இக்கட்டான நேரத்திலே
உயர்வான இதயமும், உறுதியான சித்தமும்,
உண்மை விசுவாசமும், உன்னத சேவைக் கரங்களும்
தேவைப்படுகின்றன.
பதவியின் பாசத்தினால்
மோசம் போகாதவர் யாரோ;
பதவி யென்ற பாழ் விலை கொடுத்து
வாங்க முடியாதவர் யாரோ;
நிலையான கருத்தும், குலையாத கொள்கையும்
கொண்டவர் யாரோ;
கண்ணிய முடையவர் யாரோ,
பொய் பகராதவர் யாரோ;
ஆண்டவனே, அத்தகையோரைத்
தந்தருள்வீராக!

மக்கள் எண்ணம் மகேஸ்வரன் எண்ணம் என்று கருதப்படும் இந்த ஜனநாயக யுகத்தில் நாம் ஈழத் தமிழகத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களைப் பார்த்து:

"இப்படியான ஒரு இக்கட்டான நேரத்திலே, வாக்காளப் பெருமக்களே, மேற்கூறிய தகைமையுடையோரையே மார்ச் 19 தேர்தலில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாகத் தந்தருள்வீர்களாக" என்று கேட்கிறோம்.

## யாழ் பொது மக்கள் தீர்ப்பு




## தமிழரசுக்கு வெற்றி

# குத்துக்கரண வீரர்

## சிவப்பிரகாசமும் சிவசிதம்பரமும்

அகில இலங்கை ஆளைப் பந்திக் காங்கிரஸின் சார்பில் காங்கேசன்துறைத் தொகுதிக்குப் போட்டியிடும் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் உடுப்பிட்டித் தொகுதிக்குப் போட்டியிடும் திரு எம். சிவசிதம்பரம் ஆகிய இருவருடைய பூர்வோத்திரத்தைப் பற்றியும் இவ்வாரம் ஆராய்வதாகக் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம்.

அதைப்படித்த நமது வாசகர்கள் பலர் யாழ்ப்பாணத்திலிருந்து கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆளைப் பட்ட தனிப் பெருந் தலைவரே இம்முறை யாழ்ப்பாணத்தில் கவிழப் போகிறார். அவர் தமது முகத்தைக் காப்பாற்றிக் கொள்ளப் போடும் ததிங்கிணதோம் காட்சியைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது. இந்த நிலையில் அவருடைய சிஷ்ய 'கோடி'களை வேறு அம்பலத்துக்கு இழுக்க வேண்டுமா? பாவம் விட்டு விடுங்கள். கட்டுக்காசையாவது காப்பாற்றிக் கொண்டு ஓட்டம் பிடிக்கட்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

பூர்வோத்திரத்தைத் தருவதாக ஏற்கனவே கூறிவிட்ட படியால் இதோ சுருக்கமாகத் தருகிறோம்.

யார் இந்த சிவப்பிரகாசம்? இவருடைய அரசியல் வாழ்க்கை எப்படிப் பட்டது? தமது தற்போதையக் குருநாதரான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தைப் போலவே இவரும் தமது அரசியல் வாழ்வில் போட்ட குத்துக் கரணங்கள் அளப்பில.

சட்டக் கல்லூரியில் ஒரு புரக்டராகப் பயிலும் போது தான் திரு. சிவப்பிரகாசத்துக்கு திரு ஜீ. ஜீயின் தொடர்பு ஏற்பட்டது.

தமிழ் காங்கிரஸ் என்று ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பிக்குமுகமாக 1944-ம் ஆண்டில் [illegible] மக்கள் வாழ்த்த பற்பல இடங்களில் பூர்வாங்கக் கூட்டங்கள் நடைபெற்றன.

அப்படியொரு பொதுக் கூட்டம் கொழும்பு ஜிந்துப்பிட்டி தெருவில் உள்ள ஜிந்துப்பிட்டி தியேட்டரில் (தற்போது முருகன் தியேட்டர்) நடைபெற்றது அந்தக் கூட்டத்தில்தான் திரு சிவப்பிரகாசம் திரு பொன்னம்பலத்துக்கு முதன்முதலாக அறிமுகமானார்.

பிரஸ்தாப கூட்டத்தில் திரு சிவப்பிரகாசம் பொன்னம்பலத்தை வானளாவப் புகழ்ந்து 'இந்திரன், சந்திரன் இமையோன், நாவலன்' என்றெல்லாம் பேசித் தமிழ்

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

காங்கிரஸ் என்று ஒரு ஸ்தாபனம் ஆரம்பமாவதை வரவேற்றார்.

இதன் பின்னர் 1944 நவம்பர் 27ந் தேதி கொழும்பு மாநகர மண்டபத்தில் தமிழ் காங்கிரஸின் சம்பூரண மாநாடு (First plenary session of the All Ceylon Tamil Congress) நடைபெற்றது. அதிலும் எழுந்து நின்று தமிழ காங்கிரஸை ஆதரித்தும் திரு பொன்னம்பலத்தைப் புகழ்ந்தும் அடித்து முழக்கினார் திரு சிவப்பிரகாசம்.

இப்படிப் பேசிய திரு சிவப்பிரகாசம் 1946-47ல் யு. என். பி. கட்சி ஆரம்பிக்கப்பட்டதும் பச்சை யு. என். பி யாக மாறிவிட்டார். கொழும்பு "பாம்கோர்ட்" மாளிகையிலே யு. என். பி. கூட்டத்தில் கலந்துகொண்டு ஐக்கிய தேசியக் கட்சியை புகழ்ந்து சென்ற திரு டி. எஸ். சேனநாயகாவையும் சுயமானம் சிறிதுமில்லாமல் பாராட்டி பல்லாண்டு பாடினார். கேவலம்! கேவலம்!!

அம்மட்டோடு நின்றதா? 1947ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் வந்தது. திரு ஆர். என். சிவப்பிரகாசம்—ஒரு கால் தமிழ் காங்கிரஸையும், தலைவர் பொன்னம்பலத்தையும் தாக்கிப் பேசிய தமிழ் காங்கிரஸ்வாதி—கதர் வேட்டி வேஷதாரி—எங்கே நின்றார் தெரியுமா? திரு ஏ. மகாதேவாவின் கட்சியில் நின்றார் ஒரு பாது ஏற்றிப் போற்றிய காங்கிரஸையும், தலைவர் பொன்னம்பலத்தையும் நரம்பில்லா நாவினால் தூற்றிப் பேசித் தூஷணை பொழிந்தார்.

யாழ்ப்பாணத்தில் திரு சிவப்பிரகாசம் திரு பொன்னம்பலத்தை எதிர்த்து திரு மகாதேவாவுக்கு ஆதரவாக வேலை செய்தார்.

காங்கேசன்துறையில் திரு எஸ் ஜே. வி செல்வநாயகத்தை எதிர்த்து திரு சு. நடேசனுக்கு ஆதரவாக வேலை செய்தார்.

திரு மகாதேவாவினுடைய தேர்தல் பிரசாரக் கூட்டமொன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்றலில் நடைபெற்றது. திரு வி. குமாரசாமி தலைமைதாங்கினார். திரு சு நடேசபிள்ளை திரு எஸ். சிவபாதசுந்தரம் போன்றோர் பேச்சாளர்களாக மேடையிலிருந்தார்கள். திரு ஆர். என். சிவப்பிரகாசம் பேசிக்கொண்டிருந்தார் எங்கும் ஜனத்திரளாக இருந்தது.

அந்த நேரத்தில் திரு ஜீ. ஜீ பொன்னம்பலம் முன்னர் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி தமது ஆதரவாளர்களை அந்தக் கூட்டத்துக்கு அனுப்பி வைத்துவிட்டு, திரு சிவப்பிரகாசம் பேசிக்கொண்டிருக்கையில் அந்தத் தெரு ஓரமாகத் தமது காரில் பவனி வந்தார்.

உடனே ஜீ ஜீயின் ஆதரவாளர்கள் அவரைத் திடீரென்று கண்டுகொண்டவர்கள்போல் நடித்து, திரு பொன்னம்பலத்தைக் காருக்கு வெளியே எடுத்து தோளின் மேல் தூக்கிக் கொண்டு "எங்கள் பலம் பொன்னம்பலம்" என்று கோஷம் போட்டுக்கொண்டு கூட்டம் நடைபெற்ற மைதானத்தைச் சுற்றி வலம் வந்தார்கள்.

உடனே திரு சிவப்பிரகாசம் வெகு அற்புதமாக அலங்காரமாக அந்தக் காட்சியை உருவகப்படுத்திப் பேசினார்.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குத்துக்கரண வீரர்...

## மூன்று ஒப்பந்தங்கள்

இலங்கை சுதந்திரம் பெறுந்தறுவாயிலிருந்து இற்றைவரை தமிழ் பேசும் மக்களின் தலைவர்கள் சிங்கள ஆட்சியாளருடன் மூன்று ஒப்பந்தங்கள் செய்துள்ளார்கள்.

### முதலாவது ஒப்பந்தம்

முதலாவது ஒப்பந்தம் திருவாளர்கள் ஸி. சுந்தரலிங்கம், ஸி. சிற்றம்பலம் போன்றவர்களால் காலஞ் சென்ற சேனநாயகாவுடன் செய்யப்பட்டது. "தமிழ் பேசும் மக்கள் சிங்கள மக்களோடு ஒத்துழைப்பதாக நாங்கள் உங்களோடு சேர்ந்து வெள்ளைக்காரனை பிரிட்டிஷ்காரனுக்குப் பம்மாத்துக் காட்டுகிறோம். அவன் ஏமாந்து உங்கள் கையில் ஒற்றையாட்சியின் கீழ் சுதந்திரத்தைத் தந்து விடுவான், அப்புறம் நீங்கள் எங்களுக்கு மந்திரி பதவிகள் தந்து விடுங்கள்" என்று திரு. சுந்தரலிங்கமும் திரு. சிற்றம்பலமும் திரு. டி. எஸ். சேனநாயகாவுடன் சுயநல ஒப்பந்தம் செய்துகொண்டு பிரதிபலனாக மந்திரிப் பதவிகளைப் பெற்றார்கள். தமிழ் பேசும் இனத்துக்கு துரோகம் இழைத்தார்கள்

### இரண்டாவது ஒப்பந்தம்

இரண்டாவது ஒப்பந்தம் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜீ ஜீ பொன்னம்பலத்துக்கும் காலஞ் சென்ற திரு. டி. எஸ். சேனநாயகாவுக்குமிடையில் நடைபெற்றது.

யு. என். பி. யையும் சேனநாயகாவையும் எதிர்த்து நின்ற திரு. பொன்னம்பலம் திரு. சேனநாயகாவிடம் சொன்னார்: "நான் உங்கள் சிங்கக் கொடியை ஏற்றுக்கொள்ளுகிறேன். மலை நாட்டுத் தமிழரை களபலியிடுவதற்காக பிரஜா உரிமை வாக்குரிமைச் சட்டங்களை ஆதரிக்கிறேன். தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பைத் தணித்து உங்களிடம் சரணாகதியாக்கி தமிழினத்தை அழிக்க உதவி புரிகிறேன். அவர்கள் வாழும் பிரதேசங்களை நீங்களும் உங்கள் சாகியத்தாரும் அபகரித்துக் கொள்ள உடந்தையாயிருக்கிறேன். இவ்வளவுக்குப் பிரதிபலனாக நீங்கள் எனக்கு ஒரு கே ஸி பட்டம் தந்தருள வேண்டும். ஒரு மந்திரிப் பதவி ஈந்தருள வேண்டும்" என்று ஒரு தன்னல ஒப்பந்தம் செய்து கொண்டார். இவருடைய ஒப்பந்தத்தினால் தான் தமிழ் இனம் இன்றையக் கதிக் குள்ளாயிற்று.

### மூன்றாவது ஒப்பந்தம்

மூன்றாவது ஒப்பந்தம் பிரதமர் திரு பண்டாரநாயகாவுக்கும் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்துக்குமிடையே கைச்சாத்தாயிற்று.

இந்த ஒப்பந்தத்தின்படி தமிழ் மொழிக்கு உரிமை கோரப்பட்டது. தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் பாதுகாக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக சமஷ்டி அரசமைப்பின் முதல் படியாக தமிழ் பேசும் மக்களுக்குப்பிரதேச சுயாட்சி ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்துக்குப் பண்டமாற்றாக எவரும் பட்டம் நாடியதில்லை மந்திரிப் பதவி பெற்றதில்லை. கேட்டதுமில்லை! யாசித்ததுமில்லை! தந்தாலும் ஏற்கமாட்டோம் என்று முகத்தில் அடித்தாற் போல் உறுதியாகச் சொன்னதுண்டு. சுருங்கச் சொல்லுவதால் எதுவித சுயநலத்தையும் முன்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

"இதோ எங்கள் மேடையிலே மகாதேவன் வீற்றிருக்கிறார். நடேசபெருமான் காலுக்குமேல் கால்போட்டு ஆ(ட்)டிக்கொண்டிருக்கிறார். முருகக் கடவுளான குமாரசாமி தலைமைவகிக்கிறார். அதோ சூரன் பவனி வருகிறான். சூரபத்மனான பொன்னம்பலத்தை தண்டு காவிகள் தோளில் சுமந்து சுற்றுப்பிரகாரம் நடத்துகிறார்கள். இனிச் சூரன் போர் நடக்கப்போகிறது. சூரன் தலை உருளப்போகிறது" என்று பேசினார். உடனே கூட்டத்திலும் மேடையிலும் பொலபொலவென்று கல் மாரி பொழிந்தது.

அன்று சூரன் என்று வர்ணித்த பொன்னம்பலத்தின் தாள்களைத்தான் இன்று இரு கரங்களாலும் கட்டிப்பிடித்துக்கொண்டு 'என் தலைவா! என் தலைவா!' என்று திருப்புகழ் பாடுகிறார் சிவப்பிரகாசனார்!

இதைவிட வேடிக்கை இன்னுமொன்று உண்டு. தனிப்பெருந் தலைவரைப்போலவே சிவப்பிரகாசனாரின் தலைகீழ்க் குத்துக்கரணத்துக்கு மற்றொரு எடுத்துக்காட்டு.

திரு சிவப்பிரகாசம் காங்கேசன்துறையில் திரு சு. நடேசனை ஆதரித்து ஆர்ப்பாட்டம் செய்தார் அல்லவா? தேர்தல் முடிவு வெளியானதும் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் வென்றார் என்பது தெரிய வந்தது. திரு செல்வநாயகத்தை ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். ஊர்வலம் மல்லாகம் சந்திக்கு வந்ததும் ஓடோடியும் வந்தார் திரு சிவப்பிரகாசம். திரு செல்வநாயகத்தின் கழுத்திலே ஒரு பூமாலையைத் தம் கையாலேயே சூட்டினார். சீன வெடிகளைக் கொளுத்தினர். அந்த பட்டாஸ் வெடிகள் வெடித்ததைப் போலவே ஒரு குட்டிப் பிரசங்கத்தையும் அடித்தார் இப்படிப் பட்ட குட்டிக் கரண வீரர் தான் தமிழ் காங்கிரஸின் உக்கிய முருகக்கந் தூணாக விளங்கும் மஹா ஸ்ரீ ஸ்ரீ ஆர். என். சிவப்பிரகாசம் அவர்கள்!

திரு. எம். சிவசிதம்பரத்தின் பூர்வோத்திரமும் இப்படியானதே. கொதிக்கும் கொம்யூனிஸ்டாக சர்வகலாசாலையிலிருந்து வெளியே கழுத்தைப் பிடித்துத் தள்ளப்பட்டவர் திரு. சிவசிதம்பரம்.

1944ல் கொழும்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் கட்சியின் சம்பூரண மாநாட்டில் திரு. பொன்னம்பலம் பேசி முடிந்ததும் முக்கியமான தீர்மானம் பிரேரிக்கப்பட்டது. அப்போது எழுந்தார் ஒரு 'கார்ட்போட்' வாலிபர். தீர்மானத்தை மூர்த்தண்ணியமாக எதிர்த்தார் தமிழ் காங்கிரஸையும், தலைவர் பொன்னம்பலத்தையும் தாறுமாறாகக் கண்டித்தார். விருப்பாகப் பேசினார்

அந்தக் 'கார்ட்போட்' வாலிபர் வேறு யாருமல்லர். இன்று தனிப்பெருந்தலைவர் திரு. பொன்னம்பலத்தின் வாலைப் பிடித்துக்கொண்டு உடுப்பிட்டியில் தமிழ் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிடும் திரு எம். சிவசிதம்பரம் தான் என்பது பலருக்குத் தெரியாது.

அன்றும், தொடர்ந்தும் தமிழ்க் காங்கிரஸைத் தூற்றிய திரு. சிவசிதம்பரத்தின் திருவாய் இன்று தமிழ் காங்கிரஸைப் போற்றுவதைக் காண்கிறோம். இந்த நிலை எவ்வளவு காலத்துக்குத் தான் நீடிக்கப் போகிறதோ?

# காவத்தை கொலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிட நீங்கள் சம்மதித்தீர்களா?" என்று அவரிடம் கேட்டார். "ஆம்" என்ற பதில் வைராக்கியத்தோடு கிடைத்தது.

சென்றவர் வழக்கறிஞரின் மகன் அல்லவா? ஆரம்பித்தார் மிரட்டலை. "அப்பா (ஜீ. ஜீ உங்கள் மேல் வழக்குத் தொடரப் போகிறார்" என்று பூச்சாண்டி காட்டினார். இதுதான் நடந்த சம்பவம். ஜீ. ஜீ தமிழனுக்காகப் பரிந்து 'பிறீ'யாக வழக்குப் பேசியதாக கதை அளக்கும் விஷயம் இந்த லட்சணத்தில் தான் இருக்கிறது.

### தாலி அடைவு வைத்து பீஸ் கொடுத்தனர்

காவத்தை கொலை வழக்கு தனிப்பட்ட ரகத்தைச் சேர்ந்தது அல்ல. அது நூற்றுக்கு நூறு வீதம் அரசியல் வழக்கு. அதில் சம்பந்தப்பட்ட திரு வஸ்தியாம்பிள்ளையும் திரு செல்லத்துரையும் தமது தேட்டத்தையெல்லாம் இழந்தார்கள். அபலைகளானார்கள். அவர்கள் சார்பில் வழக்கில் ஆஜராகத்தான் "வை ரூபா 7000" என்று விடாப்பிடியாக நின்றார் ஜீ ஜீ. சொந்த ஊரில் மிஞ்சியிருந்த சொத்தை விற்றும் மனைவிமாரின் தாலிக் கொடிகளை அடைவு வைத்தும் ஜீ ஜீ. யின் பீஸைக் கொடுத்தார்கள்.

### லட்சாதிபதியானார்

ஆயினும் தம்மைப் பெரிய தியாகி என்று காட்டிக் கொள்ள முயல்கிறார் தனிப் பெருந் தலைவர். தமிழ் பேசும் இனத்துக்காக இவர் 25 சதம் தானும் இதுவரை தியாகம் செய்தது கிடையாது. சாதாரண நடுத்தரக் குடும்பத்து மனிதராக, ஒரு போஸ்ட் மாஸ்டருடைய மகனாக ஜீ. ஜீ அரசியலில் பிரவேசித்தவர். அரசியலில் ஈடுபட்ட இதர தலைவர்களெல்லாம் ஓட்டாண்டிகளாகிவிட்டதுதான் நாம் கண்ட உண்மை. ஆனால் ஜீ ஜீ மட்டும் லட்சாதிபதியானார். அந்தச் செல்வ நிலை அடைந்தது எப்படி? செய்ததெல்லாம் செப்படி வித்தை! பேசியதெல்லாம் பச்சைப் பொய். சுரண்டியதெல்லாம் பொது மக்கள் பணம்! இது போதாதா? அரசியல் அவருக்கு வெறும் பொழுது போக்கு. 25 ... ஜீ அடைந்துவிட்டார்.

னிறுத்தாமல், பரநலத்தையே, தமிழ் பேசும் மக்களின் சொந்த நலத்தையே மனதில் கொண்டு செய்யப்பட்டது மூன்றாவது ஒப்பந்தம்.

இப்போது தெரிகிறதல்லவா எந்த ஒப்பந்தத்தைச் செய்தவர்கள் உண்மையான மக்கள் பிரதிநிதிகள், உண்மையான ... கள், உண்மையான ... கள் என்பது?

# சிறையில் செல்வநாயகம்



சிங்கள ஸ்ரீ அழித்த தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே வி. செல்வநாயகம் சிறைத் தண்டனை கிடைக்கப் பெற்றார். மட்டக்களப்பு சிறையிலே அவர் வைக்கப்பட்டிருந்தார்.

இம்மாதம் 19-ம் தேதி நடக்க விருக்கும் பொதுத் தேர்தலில் சுதந்திரத்துக்காக, சமத்துவத்துக்காக, ஒற்றுமைக்காக தமிழ் பேசும் மக்கள் அனைவரும் வீட்டு அடையாளத்துக்கு நேரே புள்ளடி போட்டு தமிழரசுக் கட்சி அபேட்சகர்களையே தெரிவு செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறார்.

# சமசமாஜக் கட்சியும் சிறுபான்மைத் தமிழரும்

சிறுபான்மைத் தமிழர் நலனுக்காக சமசமாஜக் கட்சி இதுவரை ஏதாவது செய்திருக்கிறதா? 25 வருடச் சரித்திரத்தை எடுத்து நீட்டும் சம சமாஜிகள் சிறுபான்மைத் தமிழருக்காக சிறுவிரல் தானும் அசைத்ததுண்டா? கிடையவே கிடையாது.

சுமார் பத்து வருடகாலத்தில் தமிழரசுக் கட்சி ஒன்று தான் பற்பல விதங்களிலும் சிறுபான்மைத் தமிழருக்காக உழைத்து வந்திருக்கிறது.

- ★ சிறுபான்மைத் தமிழரோடு சம பந்தி போசனம்.
- ★ தீண்டாமை ஒழிப்பு.
- ★ ஆலயப் பிரவேசம்.
- ★ ஹோட்டல் நுழைவு.
- ★ சிறுபான்மைத் தமிழருக்கு செனட்டர் பதவி.

இவற்றையெல்லாம் செய்த கட்சி எந்தக் கட்சி? தமிழரசுக் கட்சி. ஹோட்டல் நுழைவு இயக்கம் நடத்தும்போது கொம்யூனிஸ்டுகளும் அதற்கு ஆதரவு அளித்தார்கள். மற்ற விஷயங்களில் தமிழரசுக் கட்சி தனியாகத் துணிந்து செயலாற்றியதை எந்தச் சிறுபான்மைத் தமிழர்தான் மறுக்க முடியும்?

தமிழரசுக் கட்சி சிறுபான்மைத் தமிழர் நலனுக்காகத் தொடர்ந்து பணியாற்றக் கங்கணம் கட்டியிருக்கிறது அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில், கொள்கைத் திட்டத்தில் எல்லாம் இது விஷயம் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

## உழைக்கும் தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கக் கூட்டம்

உழைக்கும் தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கக் கூட்டம் கடந்த சனிக்கிழமை கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் வீரகேசரி ஆசிரியர் திரு கே. வி. எஸ். வாஸ் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் அமைப்பு விதிகளை ஆக்குவதற்கு நியமிக்கப்பட்ட உபகுழு சமர்ப்பித்த நகலைச் சபை சில திருத்தங்களுடன் ஏக மனதாக ஏற்றுக் கொண்டது.

நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு கே. வி. எஸ். வாஸ் (வீரகேசரி) உபதலைவர்கள்: திரு கே. கைலாசபதி (தினகரன்), திரு எஸ். டி. சிவநாயகம் (சுதந்திரன்), திரு வி. லோகநாதன் (வீரகேசரி). பொதுக் காரியதரிசி: திரு டி. சுபாரத்தினம் (தினகரன்), உதவிக் காரியதரிசி திரு பொ. பாலசுந்தரம் (வீரகேசரி), பொக்கிஷதார்: திரு வி சுப்பிரமணியம் (தினகரன்), கணக்குப் பரிசோதகர்: திரு ... சுந்தரம் (வீரகேசரி) திரு நாகமுத்து சபாரத்தினம் (வீரகேசரி) கமிட்டி அங்கத்தினர்கள்: திரு கே. கே. ரத்தினசிங்கம் (சுதந்திரன்), திரு டி. எஸ். தங்கையா (தினகரன்) திரு டேவிட் ராஜு (வீரகேசரி), திரு கே. எஸ். மகேசன் (தினகரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலும் தேர்தலும்

பாட்டு—அற்புதமான பாட்டு, அதைத்தான் என்பாட்டில் வாய்விட்டுப் படித்துக் கொண்டிருக்கிறேன்.

அந்தக் கரம் அசைந்தது. இன்ப முகம் நிமிர்ந்தது. அதன் முன்பே இதழ் குவிந்தது. விழி பதிந்தது. என் உளமும் நெளிந்தது-நுழைந்தது! எங்கே? ஏன்?

'என்ன தம்பி, ஏதோ பத்திரிகையில் வந்த பாட்டைக் கொப்பிபண்ணி வைத்து விட்டுக் கும்மாளம் போடுகிறீர்?' என்கிறீர்கள். அப்படித்தானே?

உண்மைதான். தேர்தல் களத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் இந்த 'பஸ்ஸில்' நான் எப்போது ஏறினேன்? உங்களுக்குத் தெரியுமா?

பஸ் ஓடியது. சிறிது தூரம் தான். என் கண்களுக்கு முதல் முதல் காட்சி தந்தது ஒரு அசையும் பொற்கரம்—அதன்பின் ஒரு முகம், இதழ், இரு விழி!

பத்திரிகையையும் பாடலையும் இழுத்து இழுத்து நினைவுக்குக் கொணர முயன்றேன். முடிந்ததா? பதிலாக, மழுங்கி, சிதைந்து, ஏதேதோ கூடிக், குறைந்து குதித்தது தான் இந்தப் பாட்டு. அதைத்தான் என் உதடுகள் உருப்போட்டுக்கொண்டிருக்கின்றன. நீங்கள் ஏன் இதற்காக வருத்தப்படுகிறீர்கள்?

வருத்தப்பட வேண்டியவன் நான். அதற்காக இரக்கப்பட வேண்டியவன், அல்லது கோபப்பட வேண்டியவன் இதோ முன் சீட்டிலே குங்குமச் சிலைபோல இருக்கிறாள், அவள். அவளேதான்!

இந்த அழகு கண்ணைக் குத்துகிறது. மூக்கைத் துளைக்கிறது. நெஞ்சைப் பிளக்கிறது!

அலைபாயும் கருங்கூந்தலிலே மல்லிகைச் சரத்தை அள்ளிச் செருகியிருக்கிறாள். சுதந்திரமாகக் கிடக்கும் கூந்தல் 'பஸ்' ஓடும் வேகத்திலே பறந்து என் முகத்தை வேறு தீண்டுகிறது. தாவணிக்குக்கூட என்னிலே எத்தனை மோகமோ? அதுகூட எட்டி எட்டி என்னை நோக்கித் தாவுகிறது.

"தம்பி!" என் பக்கத்திலே இருப்பவர் என்னைச் சுரண்டுகிறார்.

"அடா சனியனே! நீ பக்கத்தில் வேறு? நீ நாசமாய்ப் போக...அழகை ரசிக்கக்கூட விடமாட்டேன் என்கிறாயே எமன் மாதிரி"—இப்படி எனக்குள்ளேயே திட்டிக் கொண்டு, பல்லைக் காட்டி "என்ன?" என்கிறேன்.

"தளிரைப் பறித்து—உருள்
பனியைத் தெளித்து—வெயில்
கவியப் பிடித்த கரம்;
அமுதைத் தெளித்து—முது
நிலவைக் குழைத்து—முழு
அழகைப் படைத்த முகம்;
பவளம் தறித்து—இரு
கமலம் பதித்து—நளிர்
தரளம் சிதைத்த இதழ்;
கயலைப் பழித்து—ஒரு
மயலைச் சுழித்து—இள
மனதைத் துளைத்த விழி........."

"என்ன தம்பி ஏணியா வீடா?" அவர் கேட்கிறார். "எந்த இழவானாலும் உனக்கேனையா? எதுக்காவது போட்டுத் தொலையேன்..." இவ்வளவும் தொண்டைக்குள்ளேயே அடங்க "ஏணி தான்!" என்கிறேன்.

அடாடா! அவள் இத்தனை வேகமாக ஏன் திரும்புகிறாள்? அந்தக் கழுத்துச் சுளுக்கப்போகிறதே! என் முகத்தையல்லவா பார்க்கிறாள். சிரிப்பு வேறு மலர்கிறதே! திரும்பும் வேகத்திலே சுருங்கித் தெரிந்த முகம் என் முகத்தைக் கண்டதும் ஏன் மலர வேண்டும்? தேர்தல் கூட்டங்களிலே நான் பாடும் போது கண்டிருப்பாளோ? நான் பொய் கூறுவதை என் முகத்திலிருந்தே தெரிந்து கொண்டாளா? அதுதானா இந்தச் சிரிப்பு?

"ஏணி சறுக்கி விழுந்து விடும் தம்பி" என்கிறார் என பக்கத்து நபர்.

"ஏணியில்லாமல் நீங்கள் வீடு கட்டுவீர்களோ? என்கிறேன் நான்.

"அதே ஏணி மாடிவீட்டிலே கொள்ளையடிக்கவும் உதவுவதேன்?"

ஆ; யார் பேசியது? குயிலா? குயிலுச்குக் கூவத்தானே தெரியும் அப்படியானால் கிளியா? ஆம். அந்தப் பச்சைக் கிளிமேதான். இந்த வண்ணக்கிளி பேச, என்னோடு பேச்சுக் கொடுத்த பக்கத்து நபருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். நன்றியை ஆறுதலாகச் சொல்லலாம். முதலில் அவளோடு பேச வேண்டும். தருணம். பொன்னான தருணம்.

"அதுவா? அது..." நான் தயங்குவதுபோன்று பாசாங்கு செய்கிறேன்.

"அது ஏணியின் பிழையல்ல..." அவளை நான் அதற்குமேல் விடவில்லை. இடையிலே புகுந்தேன்.

"ஏணி வைத்தவர்களின் பிழை என்கிறீர்கள். வீடுகட்டியவர்களில் பிழையில்லையா ஏணி சாத்தக் கூடாதவகையில் கட்டியிருக்க வேண்டுமே அவர்கள்?"...... என் விதண்டாவாதம் இது.

அவள் சிரித்தாள்.

"நல்ல பேச்சிது. அப்படியானால் மதுக் குடிக்கக் கூடாத கிண்ணமொன்றை

'மாலதி'

இவர்கள் ஏன் செய்யவில்லை. என்பீர்களாகும்"

"எங்களுக்கு மதுக் குடிக்கத்தானே கிண்ணம் வேண்டும்......" நான் கூறினேன்.

"அப்படி வாங்கள் வழிக்கு. ஆனால் கிண்ணத்திலே பாலைத்தான் குடிக்கிறோம் என்று நீங்கள் ஏன் சொல்லிக் கொள்ள வேண்டும்?"

"அதுவா? ஒரு வீட்டிலே பங்காக வாழவேண்டுமென்கிறீர்களே அதற்காக......"

பங்காக வாழ்வது ஒரு ஒரு குடும்பம்தானே! அதற்காகத்தான் நாங்கள் பிரிவினை வேண்டாமென்கிறோம்."

"நாயும் கறிச்சட்டியுமாக நாள் முழுதுமே சண்டை போடப்போகிறீர்கள் ... ..." நான் சிரித்தேன் சடுதியாகச் சுடச் சுடப் பதில் சொல்ல வார்த்தைகள் வரவில்லை. உதடுகள் துடித்தன. கண்களைப் படபடத்து அடித்துக் கொண்டே சும்மா சிரித்தாள். ஆர்வம் பொங்க அவள் விழிகளிலே நான் எதையோ தேடினேன் ஒரு கணம் தான்.

"தம்பி! தம்பி!......" பக்கத்து மனிதர் கனைத்தார். "நாயாவது பூனையாவது, கிண்ணமாவது மண்ணாங்கட்டியாவது எல்லாம் வீட்டுக்குத்தான் தம்பி வந்து பூர வேணும்"

இதைக் கேட்டதும்என்னையறியாமலே பெரிதாகச் சிரித்து விட்டேன் இன்னும் யார் யாரோ சேர்ந்து சிரித்தார்கள். பக்கத்து நபர் சந்திரமண்டலத்திலே கொடி நாட்டிய அளவு பெருமையிலே பூரித்தார். அவள் என்னைப் பார்த்து முறுவலித்தாள். இதழ் பளபளத்தது. பளிங்குக் கன்னங்களும்; பழுத்த நாவற்பழக் கண்களும் செழுமை குறையாது பொளு பொளுத்த இதழ்களும் என்னை என்னவோ செய்தன.

இளம் வெற்றிலைக் கொடியின் மதமதர்ப்போடு செந்தாளம் பூவின் வண்ணமும்; ரோஜா இதழ்களின் இலேசான மணமும் அவள் அங்க மெங்கும் கொஞ்சி விளையாடின. பருவம் மெருகிட்ட அந்தச் சோலைக் குளிர்ச்சியை நான் அப்போதுதான் உணர்ந்தேன்.

ஆகா! எத்தனை இன்பமான நிமிடங்கள்! அவள் பேசும் குழைவு காதிலே தேன் வார்க்கிறதே!

பஸ் நின்றது. எல்லோரும் இறங்கினர். அவள் இறங்குகிறாள் நான் இறங்குகிறேன்.

இதோ தேர்தல் களம். இரண்டு வரிசைகள்! சிறிது தூரம் அவை எட்டித்தான செல்கின்றன.

அவள் ஹான்ட்பாக்கைத் திறக்கிறாள். ஆமாம். தேர்தல் காட். ஓ, அது விழுந்து விட்டது. நான் குனிந்தெடுத்து நீட்டுகிறேன். அவள் பெற்றுக் கொண்டு 'தாங்ஸ்' கூறுகிறாள். அந்தப் பட்டுவிரல் என் விரல்களைத் தொட்டபோது......ஆகா...!

நாங்கள் தேர்தல் நிலையத்துள் பிரவேசித்து விட்டோம்.

திரும்பி வரும்போது அவளும் வருகிறாள். அவளே வலியப் பேசுகிறாள்.

"யாருக்குப் போட்டீர்கள்?"

"நீங்கள்?......" நான் திருப்பிக் கேட்கிறேன்.

"வீட்டுக்கு......"

"அப்போ நானும் வீட்டுக்குத்தான்......"

"நல்ல மனிதர் நீங்கள்... அப்பாடா! உங்கள் பேச்சை கேட்டால்......?"

"உங்கள் கண்களையே நம்ப முடியவில்லையாக்கும்." அவள் குனிந்து கொண்டாள்.

பஸ் வரவில்லை.

நான் கேட்டேன். "நீங்கள் எதுவரை போக வேண்டும்"

"அரிசி ஆலையடி வரை"

"நடந்தே போய்விடலாம் அரை மைல் இராது"

"அப்போ நானும் வருகிறேன். பேசிக் கொண்டே போகலாம்." அவள் நடக்கத் தொடங்கி விட்டாள். பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல......

அவள் கேட்டாள்.

"நீங்கள் என்ன செய்கிறீர்கள்?"

"நடந்து கொண்டிருக்கிறேன்...... சிரிப்பு வெடித்

(14-ம் பக்கம் பார்க்க)

# தோன்றி மறைந்த உடன்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

## குடியேற்றத் திட்டம்

பிரதேச சபைகளின் அதிகாரத்துள் அடங்கும் குடியேற்றத் திட்டங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் சுமார் 10 லட்சம் ஏக்கர் நீர்ப்பாய்ச்சல் வசதியுள்ள வேளாண்மைப்பூமி தமிழர்களுக்கு உடன்படிக்கை மூலம் கையளிக்கப்படுகிறது என்று எடுத்துக்காட்டியிருக்கிறது. இந்த உடன்படிக்கை அமுல் செய்யப்படின் சிங்கள இனம் தனது 'பரம்பரைச் சோற்றுப் பானையையே தமிழர்களிடம் கொடுத்துவிட்டதாக' முடியும் என்று கவலை தெரிவித்திருக்கிறது.

## கைத்தொழில் வளம்

கைத்தொழில் வளங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் தேசியச் செல்வத்தான வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை, கல்ஓயா, கந்தளாய் ஆகிய இடங்களில் சீனி செய்வதற்கான ஸ்தாபனங்கள், கிளிநொச்சியிலுள்ள டி-டி-ரி-யும் சோடாவும் உற்பத்தி செய்யும் ஆலைகள், காங்கேசந்துறைச் சீமந்துத் தொழிற்சாலை ஆனை இறவு உப்பு உற்பத்திக் களம் புல்மோட்டை இல்மெனைற் தொழிற்சாலை மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள மீன்பிடித் துறைகள் யாவும் தமிழர்க்கு சொந்தமாகின்றனவென்று சிங்கள இனம் எச்சரிக்கப்படுகின்றது.

## தமிழ் மொழி அந்தஸ்து

தமிழ் மொழிக்கு இவ்வுடன்படிக்கைப்படி கொடுக்கப்படவிருந்த அந்தஸ்தைப் பற்றி பின்வரும் கருத்துக்களை யு. என். பி.யினர் தம் பிரசுரத்தில் சுட்டிக்காட்டுகின்றனர்.

1. இலங்கையில் வாழும் ஒரு சிறுபான்மையினத்தின் மொழி தமிழ் மொழி என்பதை அரசாங்கம் அங்கீகரித்துவிட்டது.

2. அம்மொழி தமிழ் பிரதேசங்களின் அரசாங்க நிர்வாக மொழி என்று நிர்மாணித்ததன்மூலம் இலங்கையில் ஓர் பாகம் அம்மொழிக்குத் தன் சொந்த உறைவிடமாக்கப்பட்டிருக்கிறது.

3. தமிழ் பிரதேசங்களில் வாழும் சிங்களவர்கட்கு அரசாங்கத்துடன் கடிதப்போக்குவரத்துச் செய்யும் வகையில் தம் சிங்கள மொழியை உபயோகிக்க வசதி செய்யப்படும் என்ற வசனத்தையும் சிங்களப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்கட்கு அரசாங்கத்துடன் தம் தமிழ் மொழியில் கடிதப் போக்குவரத்துச் செய்வதற்கு வசதி செய்யப்படும் என்ற வசனத்தையும் சுட்டிக்காட்டி தமிழ் மொழியைச் சிங்கள மொழியுடன் சமானமாக நடத்துவதா என்று வினவுகின்றனர். இந்த உடன்படிக்கைப் பிரகாரம் சிங்கள மொழிக்குச் சலுகையும் அபயமும் தேவைப்படும் காலம் வந்ததா என்று குரலெழுப்புகின்றனர்.

## கடைசிக் குறிப்பு

யு. என். பி.யின் "முதலடி" என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கடைசிப் பகுதி மிக முக்கியமானதாகும். அப்பகுதி வருமாறு:-

"மொழியைப்பற்றிய உடன்படிக்கை ஒரு தப்பான அடிப்படை அனுமானத்தில் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. அதாவது வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழினத்தின் பரம்பரையான உறைவிடம். அப்பிரதேசத்தில் இன்றைக்கோ வருங்காலத்திலோ தமிழ் மக்களின் தொகைக்கு சமானமான அல்லது கூடுதலான தொகைச் சிங்களவர் வதியக்கூடாது என்ற கருத்து உடன்படிக்கையின் அடிப்படையாக அமைகின்றது.

இந்த நிலைமையைப் பிரதமர் பிரதேசத்தைப்பற்றிய உடன்படிக்கையில் தமிழருக்குக் குடியேற்றத் திட்டத்தைப்பற்றியும் அங்கு தொழில் செய்ய அமர்த்துபவரைப்பற்றியும் பிரதேச சபைக்கு அதிகாரம் வழங்கியதன்மூலம் பூர்த்தி செய்து கொடுக்கிறார்"

## யார் சொல்வது சரி

சிங்கள இனத்தின் வருங்கால வாழ்வைத் தமிழினத்திற்கு அறுதி செய்து கையளித்துவிட்டதாக வாதித்து பண்டா-செல்வா உடன்படிக்கையைக் கண்டிக்கின்றது திரு டட்லி சேனநாயகாவின் தலைமையின் கீழ் இயங்கும் யு. என். பி. அதே சமயத்தில் தமிழ் காங்கிரஸின் ஆயுட் தலைவர் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம், அவ்வுடன்படிக்கை தமிழ் இனத்தை சிங்களவருக்கு விலைகூறி விற்றுவிட்டதாக ஓலமிடுகிறார்.

யார் எதைத்தான் சொன்னபோதிலும் உடன்படிக்கை இப்போது இல்லை; கிழித்து எறியப்பட்டுவிட்டது. செத்த பாம்பை ஓங்கி அடிக்கும் வீரராக மிளிர்கிறார் தனிப் பெருந் தலைவர்.

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே




சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060
கல்கத்தாவிலுள்ள இந்தியன் எஞ்சினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்சிலால் நடாத்தப்படுவது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 25 வருடகாலப் புரட்சிக் கொள்கையை

## கடந்த ஆண்டில் மாற்றி

## அமைத்தார்களாம் மாஜிக் கட்சியினர்

## காரணம் மக்கள் ஆதரவு இல்லாததே

## மொழிக் கொள்கையிலும் இதே நிலை தானே!

### தமிழுக்கு நீதி வழங்க சிங்கள மக்கள் எதிர்ப்பு எனவே 'பல்டி' அடிப்பதற்கு கேட்கவா வேண்டும்?

டாக்டர் என். எம். பெரேரா சொல்லுகிறார் தாம் ஒரு மார்க்ஸீய வாதியாம். ஆனால் ஒரு கொம்யுனிஸ்டு அல்லவாம். இது இது வேடிக்கையான பேச்சு. விநோதமானதும் கூட.

மார்க்ஸீயக் கொள்கையின் இறுதி இலட்சியம் கொம்யுனிஸம். இது பகிரங்க ரகஸியம். இன்று எந்த சமசமாஜக் கட்சியின் தலைவராக டாக்டர் என். எம். பெரேரா விளங்குகிறாரோ அந்த சமசமாஜக் கட்சிகூட 1935 ஆண்டளவில் கொம்யுனிஸத்தை இறுதி இலட்சியமாகக் கொண்ட மார்க்ஸீயக் கொள்கையின் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டது.

#### கட்சியின் மூச்சு உலகப் புரட்சி

சமசமாஜக் கட்சியின் மூச்சே இதுதான்: உலகப் புரட்சி. இதுதான் அவர்களுடைய பிரியமான சுலோகத்தில் தொக்கி நிற்கிறது. "உலகத் தொழிலாளரே ஒன்று சேருங்கள்" என்ற சுலோகத்தைச் சதா முழக்காத சமசமாஜி யாரேனும் உண்டா?

#### கொல்வின் பேச்சு

1947 பொதுத் தேர்தலில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா வெற்றியடைந்ததும், வெற்றிக்களிப்பில் மிதந்த அவ் வேளையில் ஒரு அற்புதமான சொற்பொழிவு நிகழ்த்தினர். அவர் உள்ளத்திலே இருந்த கருத்தை அப்படியே கக்கினர் தாம் உலகப் புரட்சி நடப்பதை எதிர் நோக்குபவர் என்றும் அப்படியான உலகப் புரட்சி வெகு விரைவில் நடக்கப் போகிறது என்றும் கொல்வின் ஆர். டி. சில்வா தமது பேச்சில் கூறினர். இது மட்டுமா? "தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் அரசாங்கம் ஒன்றை இலங்கையில் ஸ்தாபிப்பதே சமசமாஜக் கட்சியின் இலட்சியம்" என்ருர் அவர். நல்லதுதான், யாரும் வேண்டாம் என்று சொல்லமாட்டார்கள்.

#### ஜனநாயகக் கோட்பாட்டுக்கு முழுக்கு

ஆனல் அப்படியான அரசாங்கத்தை எப்படி ஸ்தாபிக்கத் தாம் விரும்புவதாக அவர் சொன்னுர் தெரியுமா? பாராளுமன்ற நடைமுறையை உதறித் தள்ளிவிட்டு ஜனநாயகக் கோட்பாடுகளைத் தூக்கி எறிந்து விட்டு புரட்சி மூலம் புது அரசாங்கத்தை ஏற்படுத்துவதுதான் சமசமாஜக் கட்சியின் இலட்சியம் என்று அவர் சொன்னுர்.

இவர் மட்டுமல்ல, 1947 பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட மற்றச் சமசமாஜக் கட்சியினரும் கொல்வின் பேசியது போலவே புரட்சியை ஆதரித்துப் பேசினர்கள்.

#### தோல்வியின் பின் பேச்சு

1952 பொதுத் தேர்தலில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தோற்ருர். தோல்விச் செய்தி கேட்டதும் அவர் திருவாய் மலர்ந்தருளிய கருத்து இது: "5 அருமையான வருடங்களைப் பாராளுமன்றத்தில் பாழாக்கி விட்டேன்" என்ருர். புரட்சியில் தமக்கு உள்ள நம்பிக்கையையும் வலியுறுத்தி பாராளுமன்றத்தில் இருப்பது புரட்சி நடக்க உழைப்பதற்கு ஓரளவில் சாதகமாக இருக்கும், அவ்வளவு தான் என்றும் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசினர்.

#### புரட்சிக் கொள்கை மாற்றம்

கடந்த வருடம் வரை சுமார் கால்நூற்றுண்டுக் காலமாக சமசமாஜக் கட்சி மார்க்ஸியக் கொள்கையின் இறுதி இலட்சியமான உலகப் புரட்சியோடு கிடந்து புரண்டது. அதற்காக வே பாடுபட்டது.

கடந்த வருடத்தில்தான் மேற்படி கட்சி தனது அடிப்படைக் கொள்கையில் முக்கியமானதோர் மாற்றத்தைச் செய்திருக்கிறது. கட்சி வருடாந்த மாநாட்டில் அது செய்யப்பட்டது. மாநாட்டின் பின்னர் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வமான அறிக்கையில் கொள்கை மாற்றம்பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஏ. ஆர். ஆசீர்வாதம்

சமசமாஜக் கட்சி தனது உலகப் புரட்சிப் பித்தைக் கைவிட்டுவிட்டது என்றும் அது ஒரு ஜனநாயக சோஷலிஸக் கட்சியாக மாறியுள்ளதென்றும் புரட்சிமூலம் ஆட்சியைக் கைப்பற்றவேண்டும் என்ற மனேபாவத்தை மாற்றிக்கொண்டது என்றும் அறிக்கையில் சொல்லப்பட்டிருந்தது.

#### மக்கள் ஆதரிக்காதது காரணம்

சமசமாஜக் கட்சி புரட்சிக் கொள்கையை ஏன் மாற்றிக் கொண்டது? காரணம் இது தான்! இந்த நாட்டு மக்கள் உலகப் புரட்சி என்ற சமசமாஜக் கட்சிக் கொள்கைக்கு ஆதரவு அளிக்கவில்லை. மக்கள் ஆதரவு பெருத ஒரு கொள்கையை ஏன் ஆண்டாண்டுக் காலமாக வைத்துக் கட்டியழ வேண்டும் என்று விட்டுவிட்டார்கள்.




திரு ஏ. ஆர். ஆசீர்வாதம்

#### மொழிக் கொள்கை ஏன் மாருது?

இந்த நியாயவாதத்தை சமசமாஜக் கட்சியின் மொழிக் கொள்கையோடு சம்பந்தப்படுத்திப் பார்த்தால் முக்கியமான ஒரு உண்மை வெளிச்சமாகும். மக்கள் ஆதரிக்கவில்லை என்பதற்காக 24 ஆண்டுகளாக வற்புறுத்தி வந்த புரட்சி அடிப்படைக் கொள்கையை விட்டெறிந்த சம

(13-ம் பக்கம் பார்க்க)



# நீங்கள் இல்லாவிட்டால்?

கூட்டுறவு இன்சூரன்ஸ் இலாகா,

CWE

103, சதாம் வீதி, கொழும்பு 1.
போன். 5266, 5267.

ஒரு சாதாரண வருமானமை உள்ள மனிதனின் கவலைக்கு முக்கிய காரணம் பணத் தட்டுப்பாடுதான். நீங்கள் இல்லாத காலத்தில் உங்கள் குழந்தைகளின் கல்வியை யார் கவனிப்பார்கள், உங்கள் குடும்பம் எப்படிக் காலந்தள்ளும்—என்னும் கேள்விகள் உங்களுக்கு மனக் கவலையாக இருக்கும். அந்தப் பாதுகாப்பும், மன நிம்மதியும், கூட்டுறவு இன்சூரன்ஸ் பொலிசியை எடுத்தவுடன் உங்களுக்குக் கிடைத்துவிடும்.

வாழ்க்கை, நெருப்பு, கப்பற் பகுதி, மோட்டார், பொது விபத்துகள்.

கூட்டுறவு இன்சூரன்ஸ் உலக சேவை புரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமைப் பல்லவி பாடும் ஏயெல் பதில் சொல்லட்டும்:

## பிரதிநிதியாவதற்கு இப்போதே போட்டி!

## பின்னர் யாரை யார் எப்படி ஐக்கியப்படுத்துவது?

தனிக் கட்டையாக; மொட்டை மரமாக நின்று ஊர்காவற்றுறைத் தொகுதியில் சுய இச்சைப் பட்டயத்தோடு போட்டியிடும் ஏயெல் ஒற்றுமைப் பல்லவியை ஏலேலோ என்று பாடிக்கொண்டே மண் குதிரையில் ஏறி ஆற்றைக் கடக்கக் கிளம்பியிருக்கிறார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்றத்துக்கு செல்லும் பிரதிநிதிகளை ஒற்றுமைப் படுத்தப் போகிறாராம் தாம் எந்தக் கட்சியுடனும் சேராமல் தனி மரமாக நின்றால் தான் அது முடியும் என்று தாம் நம்புகிறாராம்.

### ஏயெல் சொல்வதும் செய்வதும்

அவர் தாம் பாராளுமன்றத்துக்குப் போக முடியுமா என்பதை முதலில் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்புறந்தான் மற்றதெல்லாம். வெளியில் இருந்து ஏற்படுத்த முடியாத ஒற்றுமையை பாராளுமன்றம் போய் எப்படி வெட்டிப் பிடுங்கப் போகிறார்? இதற்கு—பதில் வராது. வரவே வராது:

ஒற்றுமை முதலில் தலைவர்களுக்குள் அல்ல, மக்களுக்குள்தான் வரச் செய்ய வேண்டும். இதைச் செய்தாரா ஏயெல்? செய்கிறாரா? ஒற்றுமை நாட்டமுள்ளவர் தாம் மற்றவர்களுடன் ஒற்றுமைப்பட்டிருக்கிறாரா? கிடையாது.

ஒரு தொகுதியில் மற்ற அபேட்சகர்களை இவர் எதிர்த்துப் போட்டியிடுகிறார் என்றால் அதன் அர்த்தம் என்ன? அங்கே ஒற்றுமை வளருமா? அன்றிப் பகை கிளம்புமா?

### இன்றைய நிலைமை

இன்றைய நிலையில் தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களின் பெருங் கட்சியாக மிளிர்கிறது கடந்த பாராளுமன்றத்தில் அந்தக் கட்சியின் பிரதிநிதிகள் 8 பேர் இருந்திருக்கிறார்கள். வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 21 தொகுதிகளில் (அம்பாறை நீங்கலாக) 19 தொகுதிகளில் தமிழரசுக் கட்சி தனது அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறது. விடுபட்ட தொகுதிகளில் ஒன்றான நிந்தவூரில் ஒரு அபேட்சகரை ஆதரிக்கிறது.

### என்ன செய்யலாம்?

இப்படியான நிலைமை வேறு எந்தத் தமிழ்க் கட்சிக்கும் இல்லை. சுய இச்சை அபேட்சகர்களும் கூட்டாக நின்று போட்டியிடவில்லை. ஒரு புறத்தில் தமிழரசார்; மறுபுறத்தில் மற்றக் கட்சிக்காரரும் சுய இச்சைகளும். தமிழரசார் எண்ணிக்கையில் கூடியவர்களாக இருக்கிறார்கள். மற்றவர்கள் குறைந்தவர்கள். குறைந்த தொகையினரைக் கூடிய தொகையினர் பக்கம் சேர்த்து ஒற்றுமையை ஏற்படுத்துவதா அல்லது மற்றப் பக்கமாக இழுபறிப்படுவதா? ஏது முறை?

தமிழரசார் பக்கத்துக்கு மற்றவர்களைக் கொண்டு சேர்த்து ஒற்றுமை ஏற்படச் செய்ய ஒருவர் முயற்சிப்பாரேயானால் அதை நாம் புரிந்து கொள்ளலாம்.

அப்படிக்கில்லாமல் ஏயெல் என்ன செய்கிறார்? தாமே தமிழரசு அபேட்சகரோடு நேரடியாகப் போட்டியிடுகிறார் ஊர்காவற்றுறைத் தொகுதியில். கட்டுக்கோப்பாக ஒற்றுமையாக நிற்கும் எட்டுத் தமிழரசுக்காரரில் ஒருவரைத் தள்ளி விழுத்திவிட்டுத் தாம் குழுமாடுமாதிரிப் புகுந்து நிலைமையைச் சீர்குலைக்க முயல்கிறார், இதன் விளைவு என்னவாகும்? புதிதாக ஒற்றுமை ஏற்படுவதற்குப் பதிலாக இருந்த ஒற்றுமையும் பறந்துபோய்விடுமே! பகை மென மேலும் வளருமே!

### ஆச்சரியம் இல்லை

இப்படிப் போட்டியிட்டுப் பகைத்துக்கொண்டு பின்னர் ஒற்றுமை ஏற்படுத்தப் போகிறேன் என்று பேசுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? மண் குதிரையில் ஏறி உட்கார்ந்துகொண்டு இதோ நொடிப்பொழுதில் ஆற்றைக் கடக்கப் போகிறேன் என்று அறியாமையினால் கொக்கரிப்பதுபோல் இல்லையா? அப்படிச் சொல்கிறவர் ஏயெல் ஆச்சே, அதனால் ஆச்சரியம் இல்லை.

# என்னைத் தாக்க...

(5- பக்கத் தொடர்ச்சி)

பேசும்பக்கலை ஏமாற்றி தன்னுரை நிலைகலங்கச் செய்துவிட்டன பலரைப் பல காலம் ஏமாற்றலாம் சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம். ஆனால் எல்லாரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது என்பதை இச் சமசமாஜிகள் அறியவில்லை போலும்.

### இவர்களுக்கு வாக்களித்தால்.....

“கூரைமேற் காய்க்கும் கோணற் சுரக்காய் வெட்ட வகையறியாதவர்களா, வானத்தைப் பிளந்து வைகுந்தம் காட்டப்போகிறார்கள்?” கடந்த வகுப்புக்கலவரத்தின்போது, தமிழ் பேசும் மக்கள் மனைவிமக்களை இழந்து, மானமிழந்து, பொருள் பண்டங்களை இழந்து, தவித்த இடங்கள் சமசமாஜிகளின் பலம்பொருந்திய தேர்தற் தொகுதிகள் என்பதை நாம் மறக்கலாகாது. இவர்களது இனிக்கும் பேச்சில் மயங்கி, வாக்குகளைக் கொடுத்தல் “தலை சொறியக் கொள்ளிக் கட்டையை எடுத்தவன்” கதையாய் முடியும்”

டாக்டர் சலினின் கூற்றுத் தமிழ் பேசும் மக்களால் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதொன்றாகும் என்றே நாமும் கூற விரும்புகிறோம்.

—“சிங்கம்”

# பதவிப் பித்து . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் ஒரு இலட்சியவாதியாக இருந்தால் சொன்னபடி செய்திருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் வந்து லீவு பெற்றுக்கொண்டு வெளியூர்கள் சென்று உல்லாசம் அனுபவித்தார். லீவு முடிய முடியத் திரும்பவும் திரும்பவும் புதிது புதிதாகப் பெற்றுக்கொண்டு சுகபோகம் அனுபவித்தார். மூன்று மாத கால எல்லை தீர்ந்த பின்னர் பழைய ‘குருடி கதவைத் திறவடி’ என்ற ரீதியில் பதுங்கிப் பதுங்கிப் பூனை போலப் பாராளுமன்றத்துக்குள் நுழைந்து கொண்டார்.

இது தான் ஜீ. ஜீ. யின் ராஜிநாமா ஸ்ரண்டு! பகிஷ்கரிப்புப் பிரதாபம்!!

பாராளுமன்றம் சென்றுப் பேச்சாளர் என்று பெயரெடுத்த பொன்னம்பலம் தமக்காக நன்றாகப் பேசுவார் ‘இங்கிலீஷில்’ என்று நம்பி வாக்காளப் பெருமக்கள் அவரைக் கடந்த முறை தெரிந்து அனுப்பினார்கள். ஆனால் அவரோ மூன்றரை ஆண்டுகாலம் நடந்த பாராளுமன்றத்தில் 23 நாட்கள் மட்டுமே அங்கு தலைகாட்டியிருக்கிறார்.


## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறுமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.


# மாஜிகளும், தோழர்களும் தனிப் பெருந் தலைவரும்

## கடந்த தேர்தல்களில் படிப்படியாக பல்லுப் பிடுங்கப்பட்டு வந்த கதை

## தமிழரசு வளர்ந்த வீர வரலாறு

தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்த வரையில் நான்கு பிரதான அரசியல் கட்சிகளும் சில சுயேச்சையாளர்களும் போட்டியிடுகின்றனர். இவர்கள் போட்டியிடுவதன் முன்னால் புள்ளி விபரங்களுடன் தங்கள் நிலை என்ன என்பதை உணர்ந்திருப்பார்களா? உணர்ந்திருந்தால் ஒதுங்கி இருக்கும் உள்ளம் உதித்திருக்குமா? எனும் வினாக்கள் எழும்புவது இயல்பே.

பின் வரும் விபரங்களைச் சிந்தித்துத் தீர்ப்பளிக்க வேண்டியது தமிழினத்தின் பிரதான கடமையாகின்றது

### சமசமாஜிகள்

முதலாவதாக தமிழ்ப் பகுதியில் இறக்குமதியான இலங்கை சமசமாஜக் கட்சியை எடுத்துக் கொள்வோம். 25 வருடமாக கொள்கை விளக்கம் செய்த இந்தக் கட்சி, 1952-ம் ஆண்டுத் தேர்தலில் இலங்கை முழுவதிலும் 3,05,133 வாக்குக்களைப் பெற்றது.

பின்னர் 1956-ம் ஆண்டிலே 2,74,204 வாக்குகளைப் பெற்றிருக்கிறது. இதன்படி பார்த்தால் 30,829 வாக்குகளை இழந்திருக்கின்றது இந்தக் கட்சி. ஏன் இழந்தனர் என்பதை வாசகர்களின் சிந்தனைக்கு விட்டு வைக்கிறோம்.

இரண்டாவதாக [illegible] இறக்குமதிக் கட்சியான கொம்யூனிஸ்டுக் கட்சி. இது 1952-ல் 1,19,715 வாக்குகளைத்தான் பெற்றது. ‘கொள்கை வளர்கிறது கோபுரம் போலே’ எனக் கொக்கரித்த தோழர்கள் 14, 813 வாக்குகளைப் பறிகொடுத்த பரிதாபத்தை இதன் மூலம் காணலாம்.

மூன்றாவதாக திரு. ஜீ ஜீ பொன்னம்பலத்தை ஆயுட்காலத் தலைவராகக் கொண்ட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், 1952-ல் 64,512 வாக்குகள் பெற்றது. 1956-ல் 8,914 வாக்குகள் மட்டும் பெற்று அரைக்கால் (1/8) கட்சியாக மாறி விட்டது.

### காங்கிரஸ்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிலையை நாம் ஆராயுமுன் சுயேச்சைப் பெருமக்கள் பெற்ற வாக்குகளையும் சிறிது காண்போம். 1952-ல் 3,63,771 வாக்குகளைப் பெற்று 12 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டார்கள் ஆனால் 1956-ல் 2,89,491 வாக்குகள் பெற்று ஆக 8 பிரதிநிதிகளே தெரிவுசெய்யப்பட்டார்கள். இங்கேயும் 74 280 வாக்காளர்கள் சுயேச்சையாளர்களைக் கைவிட்டுவிட்டார்கள். அரசியலில் சுய இச்சைகளுக்கு இடமில்லை என்பதை இந்த 1960-ம் ஆண்டுத் தேர்தல் நிரூபித்துவிட்டால் நாம் ஆச்சரியமடைவதற்கில்லை.

1952-ல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 45,331 வாக்குகளைப் பெற்றது. 1956-ம் ஆண்டுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 1,42,036 வாக்குகளைப் பெற்றது. அதாவது ஒரு லட்சம் மேலதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. ஏன்? எப்படி?

மக்கள் தமிழரசுக் கட்சியின் இலட்சியங்களை ஏற்றுக்கொண்டார்கள் என்பதாலன்றே இந்த மா பெரும் வளர்சசி. யாருக்கு வாக்களிக்க வேண்டும்? எதற்காக இப்படியான சந்தேகங்கள் தமிழ் பேசும் மக்களிடம் இன்னும் இருக்க வேண்டுமா?

### தமிழரையே நாடுவோம்

முற்போக்கு வாதிகளெனத் தம்பட்டமடித்தவர்கள் மக்கள் மத்தியிலே பின்னுக்குத் தள்ளிவைக்கப் பட்டுவிட்டார்கள்.

சுயேச்சைகளென உறுமீன் வரும் வரையும் வாடியிருந்தவர்களும் வலிமிழந்துவிட்டனர்

ஒருவரைச் சுற்றி எழுப்பப்பட்ட காங்கிரசும் அதோகதி அடைந்துவிட்டது.

தமிழ் பேசு மினத்தின் இதயகீதம், தமிழரசு.

தமிழ் பேசுமினத்தின் இபஸ்தம்பம் தமிழரசு.

தமிழ் பேசுமினத்தின் விடுதலை இயக்கம் தமிழரசு. தமிழரசின் நோக்கம் சமஷ்டி அரசியல் அமைப்பு இலட்சியம் தமிழ் பேசுமினத்தின் விடுதலை வாழ்வு, நாம் அதனையே நாடுவோம்.


உங்கள் நீடித்த எழிலுக்கு
‘எலைட்’
சூப்பர்லோன் ஜோர்ஜட்
என்றும் அழகின் அணிகலனை
அணியுங்கள்.
பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.
இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
‘எலைட்’
சுப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் பதவிக்கு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தயாராயில்லை. நம்பிய பொதுமக்களுக்குத் துரோகம் செய்யவும் முடியாது. என்னுடைய சட்ட ஞானத்தைப் போற்றுகிறீர்கள். அதே சட்ட ஞானந்தான் ஒரு விஷயத்தை எனக்குத் துலாம்பரமாகக் காட்டுகிறது. அதாவது, சோல்பரியின் ஒற்றையாட்சி அரசமைப்புச் சட்டத்தின் கீழ் தமிழ் பேசும் இனத்தின் எதிர்காலம் பாழாகப் போகிறது என்பதுதான் எனது சட்ட ஞானம் காட்டும் அந்தத் தரிசனம். என்னுடைய இன மக்கள் அழிவதை, அழிக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டு நான் உயர் நீதி மன்றத்தின் உயர் நீதியரசராய்க் கையைக் கட்டிக் கொண்டிருந்தால் போதுமா? அரசாங்க பதவி ஒன்றிலிருந்தால் நான் ஆட்சியாளருக்கு ஸ்தோத்திரம் செலுத்த முடியுமே தவிர ஒழிக்கப்படும் தமிழினத்துக்கு அழிக்கப்படும் தமிழகத்துக்கு, நசுக்கப்படும் தமிழ் மொழிக்கு பாதுகாப்புத் தேட முடியுமா? நான் தமிழ் பேசும் மக்கள் நலனுக்காக என்னுடைய எதிர்காலம் முழுவதையும் அர்ப்பணித்து ஒரு அரசியல் வாதியாகி விட்டேன், மரிக்கும் வரை ஒரு அரசியல் வாதியாகவே வாழ்ந்து இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்வுக்காகவே உழைப்பேன்'' என்றவாறு திரு. செல்வநாயகம் அப்போது கூறிவிட்டார். அன்று நடந்த இந்த உண்மைகள் அனைத்தையும் திரு. பொன்னம்பலம் நன்கறிவார். ஆனால் இன்று எல்லாவற்றையும் மறைத்து திரு. செல்வநாயகத்தின் மீது அபாண்டம் கற்பிக்கிறார்.

தமிழரசுக் கட்சி பொய்யிலே தோன்றி, பொய்யிலே வளர்ந்து, பொய்யே பேசி வருவதால் தமிழ் மக்கள் அதை நம்பக் கூடாது என்று கூறுகிறார் திரு. பொன்னம்பலம். பொய் உரைக்கக் கூடிய நா திரு. செல்வநாயகத்துடையதா அல்லது திரு. பொன்னம்பலத்துடையதா என்பதை நாடு அறியமாட்டாதா?

## ஏமாற்றம் அடைந்தார்!

தாம் வைத்த மந்திரிப் பொறியிலும், விரித்த பதவி வலையிலும் திரு. செல்வநாயகம் சிக்க மறுத்ததை அறிந்த திரு. டி. எஸ். சேனநாயகா ஏமாற்றமடைந்தார். என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தார்.

தமிழ் காங்கிரஸிலிருந்து ஒருவரை மந்திரி சபையில் இழுத்துப்போட திரு. டி. எஸ். சேனநாயகா விருப்பம் கொண்டிருக்கிறார் என்பதை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அறிந்ததும், இரகசியமாக திரு. சேனநாயகாவிடம் தூது அனுப்ப ஆரம்பித்து விட்டார் திரு. பொன்னம்பலம். தமிழ் காங்கிரஸைச் சேர்ந்த இதர பிரதிநிதிகளுக்குத் தெரியாமல் திரு. சேனநாயகாவைச் சந்திக்கவும் அவரிடம் இழிந்து குழைந்து பேசவும் தலைப்பட்டார்.

## இரகசிய ஒப்பந்தம்

சிங்கக் கொடிப் பிரச்னையில் உறுதியாக நின்றிருக்க வேண்டிய திரு. பொன்னம்பலம், சிங்கக் கொடியில் ஒரு மானங்கெட்ட கோட்டை ஏற்றுக் கொண்டு திருப்தியடைந்தார். இதற்கு காரணம் சிங்கக் கொடியின் ரூபத்தை மாற்றாமல் ஏற்றுக் கொண்டால் விரைவில் திரு. பொன்னம்பலத்தை ஒரு மந்திரியாக்குவதாகவும், அவருக்கு கே. ஸி. பட்டம் தருவதாகவும் திரு சேனநாயகா இரகசிய தூது மூலம் அறிவித்திருந்ததுதான்.

அற்ப மந்திரிப் பதவிக்காகவும், ஒரு கே. ஸி. பட்டத்துக்காகவும் சிங்கக் கொடியை ஏற்ருர்; மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு எழுத்தில் கொடுத்த வாக்குறுதியை மறந்தார்; அநியாயமான பிரஜா உரிமை வாக்குரிமைச் சட்டங்களை ஆதரித்தார்; நம்பிய தமிழ் மக்களை நட்டாற்றில் விட்டார்.

## எஸ். ஜே. வி. எச்சரிக்கை

"மந்திரிப் பதவியை ஏற்காதே. நம்பிய தமிழ் மக்களை நடு வழியில் கைகழுவாதே. நம்பிக்கைத் துரோகம் பொல்லாதது. உன் அரசியல் எதிர்காலத்தையே அழித்து விடும். ஒரே நிலையாக உறுதியோடு நில். தமிழ் பேசும் மக்களின் முடிசூடா மன்னனாக விளங்குவாய். தளராதே" என்று திரு பொன்னம்பலத்தை மீண்டும் மீண்டும் நட்புறவோடு அந்தரங்கமாக எச்சரித்தார் திரு. செல்வநாயகம்.

கேட்கவில்லை திரு. பொன்னம்பலம், புறக்கதவு வழியை நாடினார்! தமிழ் மக்களின், முடிசூடா மன்னனாக மதிப்புடன் சுதந்திரமாய் இருப்பதை விட சேனநாயகாவின் மந்திரி சபையில் ஒரு அடிமை மந்திரியாய் இருப்பது மேல் என்று எண்ணி அந்த அற்ப பதவியின் மீது ஆசை கொண்டார் அறிவு மயங்கிய திரு பொன்னம்பலம்!

ஒருகேடுகெட்ட......யைப் போல திரு. சேனநாயகா வாழ்ந்த "டெம்பிள் ட்ரீஸ்" மாளிகைக்குள் முழந்தாளில் தவழ்ந்து சென்ருர். சேனநாயகா முன்பு மண்டியிட்டார். வணங்கினார். வாழ்த்துக் கூறினார். சேனநாயகாவின் இடது கையைத் தமது இரண்டு கைகளாலும் பற்றி முத்தமிட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்!

எதிர்த்து நின்ற சேனநாயகாவிடம் சரணடைந்தார். பொருதி நின்ற யு. என். பி. யுடன் சங்கமமானார்.

# 25 வருட கால ...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

சமாஜக் கட்சியினர் மொழி விஷயத்தில் தமிழுக்கு சம அந்தஸ்து கொடுக்கப்படுவதைப் பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் ஆதரிக்கவில்லை என்று கண்டால் அந்தக் கொள்கையையும் மாற்றிக்கொள்ள மாட்டார்களா? இல்லை என்று சொல்ல என்ன ஆதாரம் இருக்கிறது?

## துரோகி கூறுகிறார்!

தமிழ் பேசும் மக்களின் மானத்தை, மதிப்பை, மரியாதையை ஈனத்தனமாக விலை கூறி விற்ற இந்தத் துரோகி இன்று வெட்கமில்லாமல் கூறுகிறார்:

"மந்திரிப் பதவிக்கு திரு. செல்வநாயகத்தை சிபார்சு செய்தேன். சேனநாயகா மறுத்து விட்டார். எனவே நான் ஏற்றுக் கொண்டேன்" என்று.

இந்த அபாண்டப் பொய்யை தர்ம தேவதை பொறுக்குமா? வாய்மைக்கும் நேர்மைக்கும் மதிப்பளிக்கும் யாழ்ப்பாணப் பொது மக்கள் பொறுப்பார்களா?

மார்ச் 19-ந் தேதி முடிவு தெரியும்.

## தனிச் சிங்களமே மாஜிக் கட்சிக் கொள்கை

சமசமாஜக் கட்சியின் மொழிக் கொள்கை தமிழுக்கும் சிங்களத்தோடு ஒத்து சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்பதே என்று கூறுவது சுத்தப் பைத்தியக்காரத்தனமாகும். 'சிங்களம் மட்டும்' என்பதுதான் சமசமாஜக் கட்சியின் மொழிக் கொள்கை. இந்த விஷயத்தில் யு. என். பி.க்கும் மற்றும் தென் இலங்கைச் சிங்களக் கட்சிகளுக்கும் சமசமாஜக் கட்சிக்குமிடையில் ஒரே ஒரு வித்தியாசம். யு. என். பி. யும் மற்றக்கட்சிகளும் பச்சையாகச் சிங்களம் மட்டும் என்கின்றன. சமசமாஜக் கட்சி சம அந்தஸ்து என்று வெறுமனே பேசி ஜாலவித்தை காட்டுவதன்மூலம் சிங்களம் மட்டும் என்ற நிலைமையை உருவாக்க விழைகிறது. இதுதான் வேறுபாடு. டாக்டர் என். எம். பெரேரா தென் இலங்கையிலும் வட இலங்கையிலும் ஒன்றுக்கொன்று முரணாகப் பேசி வருவது ஒன்றே மேற்படி கருத்தை வலியுறுத்தப் போதுமானதாகும்.


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சென்ட்ரல் ★ ஒடியன் ★ ராணி
(மருதானை) (கல்கிசை) (யாழ்ப்பாணம்)

ஆகிய திரைகளில்

டி. ஆர். மஹாலிங்கம்—பானுமதி

காலஞ் சென்ற என். எஸ். கிருஷ்ணன்-சாமி-காகா ராதாகிருஷ்ணன்

மதுரம்-ஒ. ஏ. கே. தேவர். நடிக்கும்

மணிமேகலை

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

சிவாஜி கணேசன்—சாவித்திரி நடிக்கும்

குறவஞ்சி

மார்ச் 24-ம் தேதி முதல்

சிலோன் தியேட்டர்ஸ்

திரைகளில்


சிவாஜி கணேசன்,

வைஜயந்திமாலா,

சரோஜாதேவி,

வசந்தராதேவி, எஸ். வி. சுப்பையா, பண்டரிபாய், கே. ஏ. தங்கவேலு, துரைராஜ்

நடிக்கும்




கெயிட்டி 4-வது வாரம்!

அழகர் மலைக் கள்வன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசா? சமஷ்டியா?

## இப்படிக் கேட்கும் ஜீ. ஜீ.க்கு

### தமிழ் தெரியுமா?—நாம் கேட்கிறோம்

## புரியாத விஷயத்தில் புகுந்து

### தமிழறிவு தமக்கு சூனியம் என்பதை

### புலப்படுத்தும் தனிப் பெரும் தலைவர்—பாவம்!

இரண்டு பெயர்களை வைத்துக் கொண்டு புரண்டு புரண்டு பேசுகிறார்கள் தமிழரசுக் கட்சிக் காரர்கள் என்று கூறுகிறார் மிரண்டு போய்விட்ட தனிப் பெருந் தலைவர் திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம்.

"தமிழரசு என்று ஒன்று அதுபோக சமஷ்டி என்று இன்னொன்று. இதெல்லாம் என்ன? ஏமாற்று வித்தையா?" என்று கேட்கிறார்.

#### தமிழ் தெரியுமா?

இப்படிக் கேட்கும் ஒருவர் உண்மையில் ஏமாளியாகத் தான் இருக்க வேண்டும். "உமக்கு தமிழ் தெரியுமா" என்றுதான் நாம் அவரைப் பார்த்துப் பதிலுக்குக் கேட்கவேண்டும். தமிழரசு என்றால் ஆங்கிலத்தில் (Kingdom) 'இராச்சியம்' என்ற பொருளைக் கொண்டு விட்டார் ஜீ ஜீ.

தமிழரசு என்றால் அங்கே மன்னன் ஒருவன் மணிமகுடம் தாங்கி அரசோச்ச வேண்டும் என்பது மட்டுந் தான் பொருள் அல்ல. தமிழ் இராச்சியம் இருக்க வேண்டும் என்பது மட்டும்தான் அர்த்தம் என்பதல்ல. விரிவான பொருள், காலத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டுவரும் பொருள், அரசியல் அகராதி அனுமதிக்கும் பொருள் வேறும் உண்டு.

#### தமிழரசு என்றால் என்ன?

அதாவது தமிழ் அரசு என்றால் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளின் அரசு தமிழ் பேசும் மக்களுக்காக தமிழ் பேசும் மக்களால் தமிழில் தமிழர் தம் பண்பாட்டுக்கமைய நடத்தப்படுவது என்று ஆகிறது. இதைத் தான் தமிழரசுக் கட்சி கூறுகிறது; ஏற்படுத்த விழைகிறது. நாட்டைப் பிளக்காமல் கூறுபோடாமல், துண்டிக்காமல் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தில் தமிழ் மொழி மூலமும் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தில் சிங்கள மொழி மூலமும் அதாவது மொழி வாரியாக அந்தந்த மக்களின் நலனைப் பேணி நல்லரசு நடத்துவதைத்தான் தமிழரசுக்கட்சி வற்புறுத்தி வருகிறது.

#### இதுதான் சமஷ்டி

இந்த இரண்டு அரசுகளையும் இரு இனமக்களினதும் குறிப்பிட்ட பொது நலன்களுக்காகவும் நாட்டின் முழுப்படியான ஐக்கியத்துக்காகவும் ஒரு பொது அடிப்படையில் இணைந்து இயங்க வைப்பதுதான் சமஷ்டி— அதாவது இணைப்பு ஆட்சி.

இதை வேறு விதமாகச் சொல்வதானால் தமிழ் பேசும் மக்களுக்கு தமிழ் அரசு அதாவது தமிழ்மொழி மூலம் நடக்கும் அரசு. சிங்களம் பேசும் மக்களுக்கு சிங்கள மொழி மூலம் நடக்கும் அரசு. இருசாராருக்கும் சேர்த்து இணைப்பு அரசு அல்லது சமஷ்டி அரசு.

#### தவறு இல்லை

இப்படி மொழிவழி அரசுகள் காணவேண்டும்; சமஷ்டி முறையில் இணைப்பாட்சி இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று இங்கு வற்புறுத்திவரும் ஒரே கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சியேயாகும். எனவே கொள்கை அடிப்படையிலும் இலட்சிய அடிப்படையிலும் சமஷ்டிக் கட்சி என்றும் தமிழரசுக் கட்சி என்றும் ஒரு கட்சி அழைக்கப்படுமானால் அதில் என்ன தவறு இருக்கிறது?

தனிப் பெருந் தலைவரால் இன்னமும் இந்தச் சிறிய விஷயத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லையானால் அவர் தமது தமிழறிவையும் அப்புறம் அரசியல் அறிவையும் கூடத் தீட்டிக் கொள்ளவேண்டும். வீணில் குழப்புவதை நிறுத்தி நிதானமாக விஷயத்தைக் கவனிக்க வேண்டும். அதற்கு

## சிங்களப் . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் சமாஜவாதி பெரமுனை போன்றவை தமிழ் பேசும் மக்களுக்குப் படுபாதகமானவை. இவை ஆட்சிக்கு வந்தால் தமிழ் இனம் தயவு தாட்சண்யம் இன்றி நசுக்கப்படும். எனவே இக்கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பெருமளவில் பாராளுமன்றத்துக்கு வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது சிங்களப் பிரதேசங்களில் வதியும் தமிழ் பேசும் வாக்காளர்களுடைய கடமையாகும்,

#### இவர்களுக்கு போடக்கூடாது

"மேலே குறிப்பிடப்பட்ட வெறி பிடித்த சிங்களக் கட்சியின் சார்பில் போட்டியிடும் எந்த அபேட்சகருக்கும் தமிழ் பேசும் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் போடவே கூடாது. இவை தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அபேட்சகர்களில், அல்லது சுயேச்சை அபேட்சகர்களில் தமிழ் மக்களுக்கு அனுதாபம் உடையவர்கள் யார் யார் என்பதை அந்தந்தத் தொகுதிகளில் உள்ள தமிழ் பேசும் வாக்காளர்கள் தாமே உசிதாசாரப்படி நிர்ணயித்து வாக்களிக்க வேண்டும். இது தான் தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலுமுள்ள தமிழ் பேசும் வாக்காளருக்குக் கூறக் கூடிய புத்திமதியாகும்."

மேற்கண்டவாறு தமிழரசுக் கட்சியின் மேலிடத்திலிருந்து விளக்கம் தரப்பட்டது.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நெ. 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, களுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, பிரேகம் சாந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய சகல வியாதிகள் தீரும். இவ் லேகியம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா கூந்தலதைல"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூளைச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நெ. 174. செட்டியார் தெரு, கொழும்பு-11


## அரசகரும மொழி

### அலுவலகத்தில் மீண்டும் விஷமத் தனம் ஆரம்பம்?

### தமிழ் மொழி வேலையில் அலட்சியம்: மந்த நிலை

#### தமிழ் மாணவருக்கு அநீதி

[சுதந்திரன் நிருபர்]

அரசகரும மொழி அலுவலகத்தின் கல்விப் பிரசுரப் பிரிவுக்குப் பிரதிக் கமிஷனராகக் கடமையாற்றிக்கொண்டிருந்த திரு எம். ஜே பெரேரா நீண்டகால ரஜாவில் இங்கிலாந்து சென்றுள்ளார். அவருடைய வேலைகளைக் கவனிப்பதற்காக ஆட்சியலுவற் பிரிவுப் பிரதிக் கமிஷனர் டாக்டர் நந்ததேவ விஜயசேகரா நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் மொழிக்கும் தமிழ் உத்தியோகத்தர்களுக்கும் ஹிம்சை செய்து வருகிறார், எனக் குற்றஞ்சாட்டப்பட்ட இவரது மேற்பார்வையிலே மீண்டும் அமைதியற்ற சூழ்நிலை அவ்வலுவலகத்தில் ஏற்பட்டு வருகிறது.

இவருடைய சிபார்சின்படி தமிழில் ஆட்சியலுவல் வேலைகள் தேவையில்லையென்று சில உத்தியோகத்தர்களுக்கு வேலைநீக்க அறிவித்தலும், சில உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றமும் அளிக்கப்பட்டதுண்டு என்பதும் நினைவுகூரத்தக்கதாகும்.

தமிழ் மாணவர்கள் கல்வி பயில்வதற்காகப் பாட நூல்களை இயற்றியும், மொழி பெயர்த்தும் அளிக்க வேண்டியது அரசகரும மொழி அலுவலகத்துப் பிரசுரப் பிரிவின் கடமையாகும். தமிழ்ப் பிரசுரப் பிரிவுக்குத் தகுதி வாய்ந்த பிரதிக் கமிஷனர் நியமிக்கப்படாமையாலும், போதிய உத்தியோகத்தர்கள் இல்லாமையாலும் தமிழ் மொழி வேலையில் மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. சிங்களத்தில் வெளியாயுள்ள நூல்களில் நூற்றுக்கு 30 வீதம் நூல்கள் (15) மட்டும் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டுள்ளன.

சிங்கள மாணவர்கள் பயில வேண்டிய நூல்களைத் தமிழ் மாணவர்களும் தமிழ் மொழியிற் பயில வேண்டுமாயினும், சிங்கள நூல்களின் தொகையில் அரைவாசிகூட தமிழ் மொழியில் இதுவரை வெளியிடப்படவில்லை.

வைத்தியம், தாதிமார் பயிற்சி ஆகியவற்றுக்குரிய நூல்கள் தமிழில் வெளியிடப்பட வேண்டியதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதனால், தமிழ் மாணவர்களுக்கு எல்லையற்றதொரு அநீதி விளைக்கப்பட்டதாகவே கொள்ள வேண்டியிருக்கிறது.

பிரதிக் கமிஷனர் டாக்டர் நந்ததேவ விஜயசேகராவின் தலைமையில் தயாரிக்கப்பட்ட தமிழ் "அரசகருமச் சொற்றொகுதி" வேலையினை சில உத்தியோகத்தர்களுக்கு வேலைநீக்க அறிவித்தல் கொடுத்த பின் உதவிக் கமிஷனர் திரு அ. வி. மயில்வாகனம் செயலாளர் திரு வே. பேரம்பலம், மொழிபெயர்ப்பாளர் திரு ச. சரவணமுத்து ஆகிய உத்தியோகத்தர்களின் உதவியுடன் செய்ய வைத்தமையால் இத்தாமதம் ஏற்பட்டது எனக் கூறப்படுகின்றது.

| உத்தியோகத்தர் நிலை | | சிங்களம் | | தமிழ் |
|---|---|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர்கள் | ... | 9 | ... | 5 |
| செயலாளர்கள் | ... | 4 | ... | 1 |
| மேற்பார்வையாளர் | ... | 5 | ... | 2 |

அணிமையிலே சில காலியான பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அவற்றிலும் சிங்களப் பிரிவுக்கு எத்தனை உத்தியோகத்தர்கள்—தமிழ்ப் பிரிவுக்கு எத்தனை உத்தியோகத்தர்கள்—என்ற விபரம் காட்டப்படவில்லை.

மேலும் புரியாவிட்டால் தமது 25 வருட அரசியல் வாழ்வோடு அத் துறைக்கே தலை முழுக்குப் போட்டு ஒதுங்கிக் கொள்ள வேண்டியதுதான். வேறு வழியில்லை.

## சிங்களத் தலைவர்களை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அடித்ததின் காரணம் யாதோ? இரண்டு டாக்டர் (Double Doctorate) பட்டம் பெற்றதினால் ஏற்பட்ட இரட்டை நாக்கோ என்னவோ! டாக்டரின் பக்தர்கள் தான் பதில் கூறவேண்டும்.

#### தமிழ் பேசும் இனம் இனி ஏமாற மறுக்கிறது

சிங்களத் தலைவர்கள் காலத்திற்குக் காலம் ஒவ்வொரு திருப்பத்திலும் தமிழர்களை-சிறப்பாக மலை நாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களை ஏமாற்றியுள்ளார்கள் என்று அழகாக ஆவித்து[illegible] முறையில் 1956-ல் டாக்டர் என். எம். கூறினார். இன்று அதே டாக்டர் என். எம். அவர்களைப் பார்த்து "டாக்டர் அவர்களே உங்கள் பொன்னான மொழியை யாம் உண்மையில் வரவேற்கிறோம். சிங்களத் தலைவர்களை-நிச்சயமாக உங்களையும்சேர்த்துத்தான் கூறுகிறோம், நாம் உங்கள் அனைவரையும் நம்பி ஏமாந்தது தவறுதான். இனிமேல் இத்தகைய தவறை செய்யோம்" என ஒருமித்து தமிழ் பேசும் இனம் குரல் எழுப்ப வேண்டும். அப்பொழுதுதான் நம்பி ஏமாறுவது "தமிழரின் தனிக் கலை" [illegible] வையகம் வசை மொழி கூறுது விட்டொழியும்.

## காதலும் . . .

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

தது. அதனூடே குழைந்தாள்.

உங்கள் உத்தியோகத்தைக் கேட்டால்......?"

"ஓ, அதுவா பாங்கில் குமாஸ்தா. அதாவது 'கிளார்க்'.

"மிஸ்டர் ஏரம்பமூர்த்தியைத் தெரியுமா?"

"அவன் என் ஒன்று விட்ட தம்பி!......ஏன்?"

"அவரின் தங்கைதான்... நான்......

"என்ன? உமாவா? உமா வா நீ. இந்த ஐந்து வருடத்துள் இப்படி வளர்ந்து விட்டாயா?" என்னால் நம்ப முடியவில்லை.

"ஹலோ உமா!" ஒருவாலிபன் அவளை நெருங்குகிறான். அவனை எனக்கு அறிமுகப் படுத்த முனைகிறாள் உமா." "இவர் தான்.....வந்து" வாலிபனே முந்திக்கொள்கிறான். என் பெயர் ஆனந்தன்...ம். உமா வந்து மை, லவ்......"

"வீட்டுக்கு வெற்றி!" தூரத்தே வெற்றி முழக்கம் விண்ணை இடிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய (சிங்கள) கொடி உடன்படிக்கை செய்தவர் ஜீ. ஜீ.

## பண்டா—செல்வா உடன்படிக்கையை கண்டிக்க யோக்கியதை அற்றவர்

# வெட்கம் மானம் இல்லாமல் வெறுமனே உளறுகிறார்

பண்டாரநாயகா—செல்வநாயகம் உடன்படிக்கை தோன்றியது. ஆனாலும் அதிவேகமாக மறைந்து விட்டது. அதாவது உடன்படிக்கை உருவாகக் கருவியாக இருந்த காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகாவாலேயே கிழித்தெறியப் பட்டுவிட்டது. ஆளும் மறைந்து விட்டார்.

### ஏன் ஜீ. ஜீ. கண்டிக்கிறார்?

ஆயினும் தனிப் பெருந் தலைவர் திருவாளர் ஜீ ஜீ பொன்னம்பலம் இந்த உடன்படிக்கையில் தொங்கிக் கொண்டு அரசியல் சூரத்தனம் ஆடக் கஜ கரணம் போடுகிறார். உடன்படிக்கையைக் கண்டிக்கிறார். அதற்கு ஒரே ஒரு முக்கிய காரணம் என்ன தெரியுமா? உடன்படிக்கை பண்டாரநாயகா—செல்வநாயகம் உடன்படிக்கையாக உருவானதே தவிர பண்டாரநாயகா பொன்னம்பலம் உடன்படிக்கையாக அல்ல. அப்படி அதுவந்திருக்குமானால் திருவாளர் பொன்னம்பலம் அதைக் கண்டித்திருக்க மாட்டார் என்பதுமட்டுமல்ல; தமிழர் உரிமைப் பிரகடனம் அது என்று சொல்லிக் கூத்தாடியேயிருப்பார்.

### உண்மை என்ன?

உண்மையைச் சொல்லப் போனால், பண்டாரநாயகா செல்வநாயகம் உடன்படிக்கை உதவாக்கரையாக இருந்தாலும் கூட திரு பொன்னம்பலத்துக்கு அதைக் கண்டிக்க உரிமை கிடையாது. ஏன்?

திரு பொன்னம்பலம் சிங்கள அரசாங்கங்களோடு ஏற்கனவே பல தடவைகளில் உடன்படிக்கை செய்து கொண்டு பட்டம் பதவி, பவுசு, சொகுசு எல்லாம் பெற்றவர்; தமிழ் பேசும் இனத்தைக் காட்டிக் கொடுத்து, அடகு வைத்து தமது காரியம் பார்த்த ஆசாமி.

குறிப்பாக ஒன்று சொல்லுகிறோம்: இலங்கையின் தேசியக் கொடி என்று சிங்களக் கொடி உருவானது எல்லோருக்கும் தெரியும் அல்லவா? இதில் பொன்னம்பலத்தின் பங்கு என்ன?

### ஜீ. ஜீ. செய்த உடன்படிக்கை

சிங்களக் கொடி இலங்கையின் தேசியக் கொடியாக வருவதற்கு திரு பொன்னம்பலம் மனப்பூர்வமாக ஒப்புதல் அளித்தார். தேசியக் கொடி அறிக்கையில் தமது கையொப்பத்தை வைத்துக் கொடுத்தார். இந்த அறிக்கையிலே முதலில் இருந்தது காலஞ்சென்ற பண்டாரநாயகாவின் கையொப்பமாகும். இது ஒரு உடன்படிக்கை இல்லையா? நீண்டகாலத் திட்டத்தின் பேரில் தமிழ் பேசும் மக்களை எந்நாளும் சிங்களவர்களின் அடிமைகளாக்கும் நிலைமையை உண்டாக்கும் நிரந்தர உடன்படிக்கை இல்லையா?

### தற்காலிக உடன்பாடு

இப்படியான நிரந்தர உடன்படிக்கை அப்போது செய்த திரு பொன்னம்பலம் இப்போது எந்த முகத்தோடு பண்டாரநாயகா—செல்வநாயகம் உடன்படிக்கையைக் கண்டிக்க வந்து விட்டார் என்பது தான் தெரியவில்லை.

பண்டாரநாயகா—செல்வநாயகம் உடன்படிக்கை நிரந்தரமானதல்ல. தற்காலிக உடன்பாடு அதாவது மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்தி விஷயங்களைச் சீர் செய்து கொள்வதற்கு முதல் படியாக அமைந்த ஒரு திட்டம்.

### காலம் மாறி விட்டது

இது திரு பொன்னம்பலத்துக்கு புரியாத ஒன்றல்ல. ஆயினும் தம்முடைய முட்டாள் தனமான பழைய செய்கைகளை மறைக்க தமிழர்கள் நன்று செய்த உடன்படிக்கையை மக்களிடம் சிரித்துக் கூறிக் குழப்பியடித்து வருகிறார். சொற்சிலம்பமாடிப் பிழைத்த காலம் போய் விட்டது. இனி சொல்லாமல் கொள்ளாமல் அரசியலை விட்டே போக வேண்டிய காலம் வருகிறது என்பதை தனிப்பெருந் தலைவர் தெரிந்திருப்பது நல்லது.

# போக்கற்ற தனிப்பெரும்

## தலைவர் சமஷ்டியை அப்போது ஆதரித்தார்-இப்போது எதிர்க்கிறார்

## இவரிடம் மாற்றுக் கொள்கை ஏதாவது உண்டா—கிடையாது

சமஷ்டி செல்வநாயகத்தின் சட்டைப் பையிலிருந்து இழுத்து எடுக்கப்பட்ட ஒன்றல்ல. இலங்கைக்கே அது புதியதல்ல. பொன்னம்பலமே அதுபற்றியெல்லாம் முன்னர் பிரஸ்தாபித்திருக்கிறார். இலங்கைக்கு அது தான் ஏற்ற ஆட்சி அமைப்பு என்று முழக்கியுமிருக்கிறார்.

### பிரச்னைகளைத் தீர்க்க வழி

பல இன மக்கள் வாழும் நாடுகளில் அதனால் ஏற்படக் கூடிய அரசியல் பிரச்னைகளைத் தீர்க்க அதுதான் வழி என்று கண்டிருக்கிறார்கள். சமஷ்டி ஆட்சி முறை சுவிட்சர்லாந்துபோன்ற சிறிய நாடுகளிலும் அமெரிக்கா போன்ற பெரிய நாடுகளிலும் திருப்திகரமாகச் செயல்பட்டு வருகிறது. முதலாளித்துவ நாடுகளிலும் சோஷலிஸ நாடுகளிலும் சமஷ்டி அரசமைப்பு திறம்பட நடைமுறையில் இருந்து வருகிறது.

### சமஷ்டியே சிறந்தது

ஒருவித ஐயப்பாடும் இல்லாமல் சொல்லலாம்—20ம் நூற்றாண்டு அரசியல் தாட்டாந்தங்களில்எல்லாம், பல இன மக்கள் வாழும் நாடுகளில் தோன்றும் இனவாரிப் பிரச்னைகளைத் திருப்திகரமாகத் தீர்க்க உதவக்கூடியது சமஷ்டி அரசமைப்பு ஒன்று தான் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. முதலாளித்துவ நாட்டிலும் சரி, சோஷலிஸ நாட்டிலும் அதுசரியாக வேலை செய்யும்.

தனிப்பெருந் தலைவரின் அரசியல் மேதாவித்தனம் தமிழ் பேசும் மக்களை இனி மேல் ஏமாற்ற முடியாது. சமஷ்டி இலங்கைக்கு ஆகாது என்றும் தமிழ் பேசும் மக்களுக்கு அறவே கூடாது என்றும் அவர் இன்று முன்னுக்குப் பின் முரணாக எத்தனை தான் தொண்டை கிழியக் கத்தினாலும் தமிழ் பேசும் மக்கள் ஏமாறப் போவதில்லை.

### ஜீ. ஜீயிடம் திட்டம் உண்டா?

சமஷ்டி நல்லதோ, கெட்டதோ அது வேறு விஷயம். நாட்டின் ஒற்றுமை அடிப்படையில் தமிழர்—சிங்களவர் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு தமிழரசுக் கட்சி ஒன்றைத் தவிர வேறு எந்த அரசியல் கட்சி வழி கூறியிருக்கிறது? இன்றைய நிலையில் திரு பொன்னம்பலம் என்ன கொள்கை வைத்திருக்கிறார். பிரச்னையைத் தீர்க்க என்ன வழி கூற முடியும் அவரால்? வேண்டுமானால் இதைத் தான் அவர் கூறுவார்; விரும்புவார்: தமிழ் பேசும் மக்களின் சரணாகதி; சிங்களத் தலைவர்களின் காலடியில் விழுந்து ஒரு மந்திரிப் பதவியோ அரை மந்திரிப் பதவியோ பெற்று வயிறு வளர்ப்பது.

பாவம் போக்கற்ற ஒருவர் இன்னமும் இந்தப் படுபாதகமான, ஈனத்தனமான இரத்தல் கொள்கையைக் கட்டியள வேண்டியிருக்கிறதே—அதையே மக்களிடம் சொல்லி மண் வீச்சு வாங்க வேண்டியிருக்கிறதே என்று பரிதாபப்படுவதைத் தவிர வேறு வழி இல்லை.

# கழகச் செய்திகள்

### பசறையில் முத்தமிழ் விழா

பசறை அரசினர் மத்திய கல்லூரி தமிழ் பேசும் மாணவர் மன்றத்தார்கள் மாசி மாதம் 26, 27, 28 ம் தினங்களில் ஒரு முத்தமிழ் விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

முதல் நாள் மத்திய கல்லூரி அரங்கில் பி. ப. இரண்டு மணியளவில் திரு. எம். செல்லையா ஆசிரியர் தலைமையில் விழா ஆரம்பமாயது. பின்னர் கல்லூரி அதிபர் திரு டி. மென்டிஸ் முன்னுரை நிறைவேறிய பின் செல்வன் கே. தருலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். பின்பு இயல் தமிழ் ஆரம்பமாயது பதுளை பாரதிக் கல்லூரி தலைமை ஆசிரியர் திரு. க. இராமசாமி, பசறை திரு. இரா. முத்துலிங்கம் மாணவன் செல்வன் கு. குமாரசாமி ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இடையிடையே மாணவ மாணவிகளின் இன்னிசை விருந்து அளிக்கப்பட்டன.

இரண்டாம் நாளும் மூன்றும் நாளும் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் காலை—மாலை இரு வேளைகளிலும் நடைபெற்றது. இரு நாளும் காலைமாலை முறையே திரு. நா. கந்தையா, திரு. செ. சின்னத்தம்பி, திரு ஐ சாரங்கபாணி, திரு. செ. இராஜசௌந்தரம் ஆகியோரின் தலைமையில் விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. எதுளை அ. மு. பாடசாலை ஆசிரியர் ஜனாப் எஸ். ஏ. எச். [illegible] வதுளை திருக்குறள் மன்றத் தலைவர் திரு. பெ கந்தசாமி, கொழும்பு சாஹிராக் கல்லூரி சரித்திர விரிவுரையாளர் ஜனாப் எம். சமீம், பசறை ரோயல் அச்சக நிர்வாகி திரு. இளங்கவிஞர் தமிழோவியன் கல்லூரி மாணவி செல்வி மைத்திரிப்பிரியா, கம்பளை அரசினர் பாடசாலை ஆசிரியர் ஜனாப் அப்துல் சமது. வதுளை அ. மு. பாடசாலை ஆசிரியர் திரு. அப்துல் காதர் ஆகியோர்கள் கருத்துரை உரையாற்றினர்.

இறுதி நாளன்று "தூக்கு மேடை" நாடகம் மாணவர்களால் நடித்துக் காட்டப்பட்டது.

### தமிழாசிரியர் சங்கம் குருநாகற் கிளை

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்க குருநாகற் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 6-3-60-ல் குருநாகல் கதிரேசன் கோவில் மா மண்டபத்தில் திரு. ஆ. சிற்றம்பலம் தலைமை ஆசிரியர் தலைமையில் ஆரம்பமானது. அத்தருணம் பின்வரும் பிரேரணைகள் விவாதத்துடன் நிறைவேறின.

(1) தராதர ப்பத்திர ஆசிரியரின் பத்திர உயர்ச்சிக் காலம் குறித்து அணிமையில் வித்தியா பகுதியினரால் வெளிவந்த சுற்றறிக்கைப் படி பத்திர உயர்ச்சியை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரும்படி கல்விப் பகுதியினரை இச் சபை [illegible]

(2) [illegible] யிலிருக்கும் பயிற்சி பெறாத சகல ஆசிரியர்களுக்கும் அவர்களின் சேவைக் கிரமப்படி பயிற்சிக் கலாசாலைக்கு பரீட்சையின்று அனுப்பட வேண்டுமென்று இச் சபை வேண்டிக் கொள்கிறது.

(3) சகல அரசினர் தமிழர் ஆசிரியர்களின் சேவை விபர அட்டவணையை கிளைச் சங்க மூலம் தாய்ச் சங்கம் தயார் செய்தல்.

(4) அரசினர் சிங்களப் பாடசாலைகளுடன் சேர்ந்த வரும் தமிழ்ப் பாடசாலைகளின் நிலையை பொதுச் சபை ஆராய்ந்து சீர்ப்படுத்தல்.

(5) அரசினர் தமிழ்ப்பாடசாலைகளின் கல்வியின் தரம் மேம்படச் செய்வதற்கு ஒரு செயற்குழுவை நியமித்து பொதுச் சபை ஆவன செய்தல்.

பின்னர் கீழ்கண்ட புது வருட உத்தியோகஸ்தர் தெரிவு செய்யப் பெற்றனர்:—

தலைவர்: திரு. ஆ. திருச்சிற்றம்பலம். காரியதரிசி: திரு க. முருகேசு, தனாதிகாரி: திரு க. கதிரவேலு. உப தலைவர்: திரு ச. அருளானந்தம், உப காரியதரிசி: திரு க. கதிர்காமர்.

திருவாளர்கள்: இ. சு. முருகேசு, வ. கிருஷ்ணபிள்ளை, ஆ. சண்முகராசா, மா. சோமசுந்தரம், ம. செல்லையா, இ. கந்தையா ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டனர்.

### இளம் கமக்காரர் கழகம்

எல்லாளன் இளம் கமக்காரர் கழகத்தின் ஆண்டுக் கூட்டம் அணிமையில் வட்டியடைப்பு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் டாக்டர் த. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது.

போதனாசிரியர் திரு சோமசுந்தரம், திரு தி. வ. துரைரத்தினம், திருமதி செல்லம்மாள், செல்வி வே. மகேஸ்வரி முதலியோர் பேசிய பின்னர் கீழ்க்கண்டவர்கள் நடப்பு வருட சங்க உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: சு. நாகராசா, உப தலைவர்: சு. நாகேஸ்வரி, இணைச் செயலாளர்: தி. வ. துரைரத்தினம், ஆ. அதிசயமலர், பொருளாளர்: ஆ. மகேஸ்வரி. நிர்வாக உறுப்பினர்கள்: இ. வேலாயுதம், ஆ. தியாகராசா, ச. மகேந்திரன் கா. பரமேஸ்வரி, இ நாகேஸ்வரி, பொ. பத்மாவதி.

கழகப் போஷகர்கள்: டாக்டர் த சிவசுப்பிரமணியம், திரு கா சின்னத்துரை, திருமதி செல்லம்மா.

## ஆள்மாறாட்டத்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்ணி வைத்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

காரில் போய் வாக்களிப்பது இம்முறை சட்ட விரோதம் ஆகையால், இப்படியான காரியங்கள் நடைபெற்றால் பொது மக்கள் அவற்றைக் காட்டிக் கொடுத்துவிட வேண்டும்.

### பெரும் குற்றம் தண்டனையுண்டு

அத்தோடு வாக்குப் போட அபேட்சகர் ஏற்பாடு செய்யும் காரில் போவது பெரும் குற்றம் என்பதையும் அதற்கு வாக்காளரே தண்டனை பெற வேண்டும் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கடைசி நேரத்தில் பணமும் சாராயமும் கொடுக்கவும் மேற்படி அபேட்சகர் ஆயத்தங்கள் செய்கிறாராம். இதற்கு வேண்டிய பணத்தை ஒரு பெரிய சிங்கள அரசியல் கட்சி இவருக்குக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது "கொடுத்தால் கொடுக்கட்டும் பெறுபவர்கள் பெறட்டும். ஆனால் 19-ந் தேதி காலையில் வீட்டுக்கு நேரே வாக்குப் போட்டுவிட வேண்டியதுதான். ஏனென்றால் எங்கள வாக்கு அவர் கொடுக்கும் பணத்தையும், சாராயத்தையும் விட அதிக மதிப்பு வாய்ந்தது என்பதை நாம் உணர்ந்து விட்டோம். இதை அவரும் உணர வேண்டும் அல்லவா?" இப்படி யாழ்ப்பாணத் தொகுதியைச் சேர்ந்த ஒரு வாக்காளர் என்னிடம் கூறினார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்றே பாருங்கள்!

## 2-வது இன்ப வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை)

பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

ஆகிய தியேட்டர்களில்

பிரேம் நசீர், எஸ். வி. சுப்பையா, ஜி. முத்து கிருஷ்ணன், ராமராவ், பக்கிரிசாமி

மற்றும்

எம். என். ராஜம், ஸ்ரீரஞ்சனி, என். லலிதா, கே. ஆர். செல்லம்,

நடிக்கும்




# ஒரே வழி




தந்தையின் பின் தமையன் குடும்ப பொறுப்பை ஏற்று நடத்த வேண்டும் என்பது இயற்கையின் நியதி.

ஆனல் அடைந்த இன்னல்கள் எத்தனை?

எதுவாயினும் கடைசியில் கண்டது வெற்றிதானே!

நடனம்: சாயி – சுப்புலட்சுமி

பின்னணி : சிதம்பரம் ஜெயராமன், டி. எம். சௌந்திரராஜன், ஏ. எம். ராஜா, மற்றும் பலர்

டைரக்ஷன்:

## கே. சங்கர்

இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்த, 195-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க [illegible] அச்சகத்தில் பதிப்பித்து 1960 மார்ச் 20-ம்தேதி பிரசுரிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org